
புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



## ‘திராவிடர் விடுதலைக் கழகம்’ நடத்திய செங்கொடி நினைவு நாள்





தலைநகர் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் செங்கொடி நினைவேந்தல் பொதுக் கூட்டம் ஆக.26 அன்று மாலை சேத்துப்பட்டு வைத்தியநாதன் வீதியில் எழுச்சியுடன் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நடைபெறும் முதல் பொதுக் கூட்டமும் இதுவேயாகும். கூட்ட மேடைக்கு அருகே செங்கொடி நினைவுத் தூண் ஏற்கனவே கழக சார்பில் நிறுவப்பட்டிருந்தது.

சென்னை மாவட்டக் கழகத் துணை செயலாளர் ஆ.வ.வேலு தலைமையில் கு.வெங்கடேசன் வரவேற்புரையுடன் கூட்டம் தொடங்கியது. நிகழ்வில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் வேல் முருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சி செய்தி தொடர்பாளர் வன்னியரசு, பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள், தமிழக மக்கள் உரிமைக் கழக வழக்கறிஞர் பா.புகழேந்தி, திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் செங்கொடிக்கு வீரவணக்கம் செலுத்தியும், தூக்குத் தண்டனையை ஒழிக்குமாறு வலியுறுத்தியும் பேசினர்.

நிகழ்வில் தோழர் செங்கொடிக்கு கூட்டத்தினர் அகவணக்கம் செலுத்தினர். தோழர் இளஞ்சித்தன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாவட்ட துணைத் தலைவர் ரவிக்குமார் நன்றி கூறினார். எழும்பூர் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் மிகச் சிறப்பாக கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.



## உச்சநீதிமன்றம் ஒப்புதல்


# 9 ஆண்டுகளாக சட்ட விரோதமாக தூக்கு

தூக்குத் தண்டனை ஒழிப்பு இயக்கத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. தவறான குற்றச்சாட்டு களின் அடிப்படையில் ஒருவரை சாகடித்துவிடும் ஆபத்துகள் நிறைந்த தண்டனை என்பதை உலகம் முழுதும் மனித உரிமையாளர்கள் வற்புறுத்தி வரு கிறார்கள். இதே கருத்தை இப்போது இந்தியாவில் நீதிபதிகளாக இருந்தவர்களும் சுட்டிக்காட்ட முன் வந்துள்ளதோடு, குடியரசுத் தலைவராக அண்மையில் தேர்வு செய்யப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜிக்கும், கடிதம் எழுதியுள்ளனர். இந்தியாவின் 13வது குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரணாப் முகர்ஜிக்கு கடந்த 2012 ஜூலை 25 ஆம் தேதி 14 முன்னாள் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் கையெழுத்திட்டு தனித்தனியாக எழுதியுள்ள முறையீட்டு கடிதங்களில் தற்போது, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 13 பேரின் தூக்குத் தண்டனையை நிறுத்துவதற்கு குடியரசுத் தலைவர் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை (அரசியல் சட்டத்தின் 72வது பிரிவு) பயன்படுத்த முன்வர வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர்.

இதில் அதிர்ச்சி தரக்கூடிய செய்தி, உச்சநீதி மன்றமே தவறான தீர்ப்புகள் அடிப்படையில் தூக்குத் தண்டனை கடந்த 9 ஆண்டுகளாக வழங்கப்பட் டிருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டுள்ளதாகும். இந்த உண்மையை வெளியே கொண்டு வந்துள்ளனர், இந்த நீதிபதிகள். நீதிபதிகளே இப்படி, ஒரு குழுவாக இணைந்து குடியரசுத் தலைவருக்கு இத்தகைய கடிதங்களை எழுதுவது இதற்கு முன் எப்போதும் நடந்திடாத ஒரு நிகழ்வாகும். மூன்று தமிழர் தூக்குத் தண்டனையை (பேரறிவாளன், சாந்தன், முருகன்) நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைக்காக தன்னைத் தானே தீயிட்டு உயிராயுதமாகிய வீராங்கனை செங்கொடி முதல் நினைவு நாளில் மரண தண்டனைக்கு எதிரான இந்தச் செய்தி வெளி வந்திருப்பது செங்கொடியின் வீரமரணத்துக்கு கிடைத்துள்ள உரிய மரியாதை என்றே கருத வேண்டியிருக்கிறது. இந்த நீதிபதிகளின் கடிதங்களில் கூறப்பட்டுள்ளது என்ன?

- 1980 ஆம் ஆண்டு வந்த ஒரு வழக்கில்தான் முதன்முதலாக உச்சநீதிமன்றம், தூக்குத் தண்டனைக்கு ‘கடிவாளம்’ போட்டு, ‘அரிதிலும் அரிதான வழக்கு’ என்று தீர்மானிக்கப்படும் குற்றங்களுக்கு மட்டுமே தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று அறிவித்தது (பச்சன் சிங் என்பவருக்கும் பஞ்சாப் மாநில அரசுக்கு மிடையே நடந்த வழக்கு) இந்தத் தீர்ப்பை வழங்கியது, 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட அமர்வு (Constitution Bench).
- ‘அரிதினும் அரிதான வழக்கு’ என்று ஒரு வழக்கை நீதிமன்றம் முடிவு செய்யும்போது, குற்றத்தின் கொடூரமான பின்னணியை மட்டும் கருத்தில் கொள்ளக்கூடாது. குற்றவாளியின் சமூகப் பின்னணி, அவர் குற்றம் செய்ததற்கான பின்னணியையும் குற்றத்துக்கு சமமான அழுத்தம் கொடுத்து பரிசீலிக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால், 5 உச்சநீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ‘அரசியல் சட்ட அமர்வு’ வலியுறுத்திய இந்த அழுத்தமான கருத்து பிறகு வந்த தீர்ப்பு களில் வெளிப்படையாகவே மீறப்பட்டுள்ளது.
- ராஜஸ்தான் மாநிலத்தைச் சார்ந்த ராவ்ஜிராவ் என்பவர், 1996 ஆம் ஆண்டு மே 4 ஆம் தேதி உச்சநீதிமன்றத் தீர்ப்பால் தூக்கிலிடப்பட்டார். தொடர்ந்து 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 7 ஆம் தேதி இதே மாநிலத்தைச் சார்ந்த சுடர்ஜாராம் என்பவரும், உச்சநீதிமன்றத் தீர்ப்பால் தூக்கி லிடப்பட்டார். இந்தத் தண்டனைகளை வழங்கிய 2 உச்சநீதிமன்ற நீதிபதிகளும் ஏற்கனவே 12 நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக செயல்பட்டுள்ளனர்.
- **“ஒரு கிரிமினல் குற்றத்தில் முறையாகத் தண்டனை வழங்கப்படும்போது, குற்றத்தின் தன்மை மற்றும் கொடூரத்தை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டுமே தவிர குற்றவாளியின் பின்னணியைப் பார்க்க வேண்டியது அவசியமல்ல”** என்று இந்த நீதிபதிகள் தீர்ப்பில் எழுதினர். (பாரா 24) இது 12 நீதிபதிகள் அடங்கிய அமர்வு வெளியிட்ட தீர்ப்புக்கு நேர் முரணாகும்.
- இந்தத் தவறான ‘ராவ்ஜி’ வழக்கின் தீர்ப்பையே முன்னுதாரணமாகக் கொண்டு, அதற்குப் பின் வந்த பல வழக்குகளில் உச்சநீதிமன்றம் மீண்டும் மீண்டும் தவறாகவே தூக்குத்தண்டனைகளை விதித்து வந்துள்ளது.
- அண்மையில் 2009 ஆம் ஆண்டில் உச்சநீதி மன்றத்தின் பரிசீலனைக்கு மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த 3 தூக்குத் தண்டனை வழக்குகள் கொண்டு வரப்பட்டன. ஒன்று சந்தோஷ்குமார் பாரியார் என்பவர் மீதான வழக்கு. இரண்டாவது திலீப் திவாரி என்பவர் மீதான வழக்கு. மூன்றாவது ரகேஷ் குமார் என்பவர் மீதான வழக்கு. மகாராஷ்டிராவைச் சார்ந்த இந்த

(2 ஆம் பக்கம்)



# சிறுவனுக்கு தூக்குத் தண்டனை தந்த நீதிமன்றம்


(முதல் பக்கத் தொடர்ச்சி)

3 பேர் தூக்குத் தண்டனைகள் விசாரணைக்கு வந்தன.

- இதில் சுந்தோஷ் குமார் பாரியார் என்பவர் வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்த உச்சநீதிமன்றம், இது ‘அரிதிலும் அரிதான வழக்காகக் கருத முடியாது’ என்று கூறிவிட்டது. ஏற்கனவே உச்சநீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு வழங்கிய தீர்ப்பின்படி **குற்றவாளியின் பின்னணியையும் கவனத்தில் கொண்டு,** ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. “ஒரு குற்றவாளிக்கு தூக்குத் தண்டனையை விதிப்பதற்கு முன் அவர் திருந்தி வாழக்கூடிய வாய்ப்புள்ளவரா என்பதை முன் நிபந்தனையாகக் கொண்டு, தீர்ப்பளிக்க வேண்டும். இதை உச்சநீதி மன்ற அரசியல் சட்ட அமர்வு தெளிவாகக் கூறியுள்ளது. இதைக் கருத்தில் கொள்ளாமல், இந்த குற்றவாளிக்கு, பம்பாய் உயர்நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்துள்ளது” என்று நீதிபதிகள் தீர்ப்பில் கூறினர்.
- இந்தத் தீர்ப்பில் நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ள கருத்துகள் மிகவும் முக்கியத்துவம் கொண்டவை. ஆயுள் தண்டனை ஒருவருக்கு விதிக்கப்பட்டால், அதற்கான **“காரணங்களை”**க் குறிப்பிட வேண்டும். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் அதற்கான **“சிறப்பான காரணங்களை”**க்கூற வேண்டும். இந்திய தண்டனைச் சட்டத்தின் 354(3) விதி இப்படி கூறுகிறது. இதில், குற்றத்துக்குச் ‘சிறப்பான காரணங்கள்’ உண்டு என்று முடிவு செய்தால், குற்றப் பின்னணியை மட்டும் கருத்தில் கொள்ளாமல், குற்றவாளிப் பின்னணியையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால், இதற்கு மாறான கருத்தை ராவ்ஜி வழக்கில் பதிவு செய்து தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதை நீதிபதிகள் சுட்டிக் காட்டினர்.
- அனைத்துக்கும் உச்சமாக மேற்குறிப்பிட்ட 2009 ஆம் ஆண்டு பாரியார் வழக்கில் நீதிபதிகள் பதிவு செய்துள்ள கருத்துகள் மிகவும் அதிர்ச்சித் தரத்தக்கதாகும். 1996 ஆம் ஆண்டு ராவ்ஜிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தவறான தீர்ப்புக்குப் பிறகு, 9 ஆண்டுகளாக அதையே முன்னுதாரணமாகக் கொண்டு, குறைந்தது 6 வழக்குகளில் 7 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. **இது பிழையாலும் அறியாமையானாலும் வழங்கப்பட்ட தீர்ப்புகள் என்றே, நாங்கள் கருதுகிறோம்** என்று உச்சநீதி மன்ற நீதிபதிகள் தவறை ஒப்புக் கொண்டுள்ளனர்.
- (We are not oblivious that Ravji case has been followed in atleast six decisions of this court in which death punishment has been awarded in last nine years, but, in our opinion, it was rendered ‘per incurian’ (out of error and ignorance)
- இந்தத் தவறை உச்சநீதிமன்றம் ஒப்புக் கொள்வதற்கு ஒரு சில நாட்கள் முன்பு வந்த ஒரு வழக்கில்கூட ‘ராவ்ஜி’ வழக்கில் வழங்கப்பட்ட தவறான தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு, 6 பேர் தூக்குத் தண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது. (மகாராஷ்டிராவில் நடந்த அங்குஷ் மாருதி ஷிண்டே உள்ளிட்ட 6 பேர் மீதான வழக்கு). இதில் தூக்குத் தண்டனைக்கு உள்ளான அங்குஷ் ‘மைனர்’. 18 வயது நிறைவடையாத அங்குஷ் மாருதி ஷிண்டே சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில்தான் சட்டப்படி, வைக்கப் பட்டிருக்க வேண்டும். அனால் சட்டவிரோதமாக 9 ஆண்டுகள் மராட்டிய சிறையில் அடைக்கப் பட்டிருந்தான். இதில் 6 ஆண்டுகள் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளான். சிறுவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிப்பதை சட்டம் தடை செய்துள்ளது. ஆனாலும், இவனது ‘கருணை மனு’வை மாநில ஆளுநர் நிராகரித்துள்ளார். வழக்கை விசாரித்து தண்டனை வழங்கிய நாசிக் விரைவு நீதிமன்ற நீதிபதி, இந்த சிறுவனைப் பார்த்தவுடனேயே வயது பற்றி கேட்டறிந்திருக்க வேண்டும். அந்த சிறுவனின் பள்ளிச் சான்றிதழிலேயே பிறப்பு தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களைப் பரிசீலிக்காமலே தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட இந்த சிறுவன், கடுமையான போராட்டங்களுக்குப் பிறகு, கடந்த 2012 ஜூலை 7 ஆம் தேதி தூக்கிலிருந்து தப்பியுள்ளான். நாசிக் மாவட்ட நீதிமன்றம் அனிக்ஷா ஷிண்டே ஒரு ‘மைனர்’ என்று அறிவித்ததால், இந்த சிறுவன் தலை தப்பியது.
- இப்படி உச்சநீதிமன்றமே தவறான தீர்ப்புகளால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை ஒப்புக் கொண்டிருப்பதை பிரணாப் முகர்ஜிக்கு எழுதிய கடிதங்களில் சுட்டிக்காட்டிய நீதிபதிகள் “சுதந்திர இந்தியாவில் ‘குற்றம் மற்றும் தண்டனைக்கான’ கிரிமினல் வழக்கு வரலாற்றில் நீதித் தன்மை கொடூரமாக சிதைக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தியை மிகவும் காலம் கடந்தே எங்களால் கூட அறிய முடிந்தது என்று வேதனையுடன் பதிவு செய்துள்ளனர். ‘ராவ்ஜி’ வழக்கின் தவறான முன் உதாரணத்தை முன் வைத்து, தற்போது தூக்குக் கொட்டடியில் நிறுத்தப்பட்டுள்ள 13 பேரின் பெயர்ப் பட்டியலையும் முன்னாள் நீதிபதிகள் குறிப்பிட்டு, அவர்களின் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட வேண்டும்; ஆயுள் தண்டனையாக மாற்றப்பட வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளனர்.

குடியரசுத் தலைவர் இந்தக் கடிதங்களை உள் துறை அமைச்சகத்துக்கு அனுப்பி வைத்துள்ளார்.

**நன்றி: ‘பிரன்ட் லைன்’ செப்.7**



## தூக்குத் தண்டனை; சில தகவல்கள்

உலகம் முழுதும் அனைத்து நாடுகளும் மரண தண்டனையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று, 2007, 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் அய்.நா.வின் பொதுச் சபை தீர்மானம் வலியுறுத்தியது. நடப்பு ஆண்டிலும் இதே போன்ற தீர்மானம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2007 ஆம் ஆண்டு அய்.நா. முதலில் இத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது 104 நாடுகள் ஆதரித்து வாக்களித்தன. 54 நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. 29 நாடுகள் விலகி நின்றன. அடுத்த ஆண்டில் மேலும் 2 நாடுகள் கூடுதலாக வாக்களித்தன. எதிர்க்கும் நாடுகள் எண்ணிக்கை 54லிருந்து 46 ஆக குறைந்தது. விலகி நின்ற நாடுகள் 34 ஆக உயர்ந்தது. மீண்டும் 2010 இல் தீர்மானம் ஓட்டெடுப்புக்கு வந்தபோது, 109 நாடுகள் ஆதரவாகவும், 41 நாடுகள் எதிர்ப்பாகவும் ஓட்டளித்தன. 36 நாடுகள் வாக்கெடுப்பில் பங்களிக்காமல் விலகி நின்றன.

1945 இல் அய்.நா. சபை உருவானபோது 8 நாடுகள் மட்டுமே தூக்குத் தண்டனையை முழுமையாக ஒழித்திருந்தன. 2012 ஜூன் மாத நிலவரப்படி, உலகின் மூன்றில் இரண்டு பங்கான 141 நாடுகள் சட்டப்படியோ, அல்லது நடைமுறையிலோ தூக்குத் தண்டனையை ஒழித்துவிட்டன. 1977 ஆம் ஆண்டு ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷன்’ என்னும் மனித உரிமை அமைப்பு, தூக்குத் தண்டனைக்கு எதிரான இயக்கத்தைத் தொடங்கிய பிறகு 18 நாடுகள் மட்டுமே, மரணதண்டயை ஒழிக்க முன் வந்தன. கடந்த 30 ஆண்டுகளில்தான் பெரும் எண்ணிக்கையில் தூக்குத் தண்டனையை ஒழிக்க நாடுகள் முன் வந்தன.

அய்ரோப்பா முழுதும் (பெலாரஸ் என்ற நாட்டைத் தவிர) தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. சில கரீபியன் நாடுகளும் அமெரிக்காவும் தூக்குத் தண்டனையை வைத்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில்கூட 16 மாநிலங்கள் தூக்குத் தண்டனையை ஒழித்துவிட்டன. ஒரு மாநிலம் நடைமுறையில் நிறுத்தி வைத்துள்ளது. ஆப்பிரிக்காவில் 38 நாடுகளில் தூக்குத் தண்டனை சட்டரீதியாகவோ அல்லது நடைமுறையிலோ ஒழிக்கப்பட்டு விட்டது. மத்திய ஆசியா மற்றும் பசிபிக் மண்டலங்களிலும் தூக்குத் தண்டனை முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டது.

தூக்குத் தண்டனையை அனுமதித்துள்ள நாடுகள்கூட அதிகமாக தூக்குத் தண்டனையை அளிப்பதில்லை. 2011 இல் தூக்குத் தண்டனையை ஏற்றுக் கொண்டுள்ள நாடுகளில் 21 நாடுகளில் மட்டுமே இத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த அய்ந்து ஆண்டுகளில் இந்த நாடுகளில் தூக்கில் போடப்பட்டவர் எண்ணிக்கை 25-அய் தாண்டவில்லை.

இந்தியாவில் தூக்குத் தண்டனை சட்டத்தில் இடம் பெற்றுள்ளது என்றாலும், அபூர்வமாகவே நிறைவேற்றப்படுகிறது. 2004 ஆகஸ்டில் கடைசியாக தனஞ்செய் சட்டர்ஜி தூக்கில் போடப்பட்டார். கடந்த 15 ஆண்டுகளில் தூக்கிலிடப்பட்ட ஒரே நபர் இவர்தான். ‘சுதந்திரம்’ கிடைத்தவுடன், இந்தியாவில் ஆண்டுதோறும் சராசரியாக 150 பேர் தூக்கிலிடப்பட்டனர். 1965-லிருந்து 1974 வரை ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக சுமார் 50 பேர் தூக்கிலிடப்பட்டனர். 1975-84 இல் இந்த சராசரி எண்ணிக்கை 12 ஆகவும், 1985-94 இல் 4 ஆகவும் குறையத் தொடங்கியது.

தூக்குத் தண்டனை எண்ணிக்கைக் கணிசமாக குறைந்த காலகட்டங்களில் குற்றங்களோ, வன்முறைகளோ குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து விடவில்லை என்றே உள்துறை அமைச்சகம் வெளியிட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்ட பல்வேறு நாடுகளிலும் இதே போக்குதான் உள்ளது.

2010 இல் அய்.நா. தீர்மானம் வந்தபோது அண்டைநாடுகளான பூட்டான், மாலத் தீவு ஆகிய நாடுகள் தூக்குத் தண்டனை ஒழிக்கக் கூடாது என்ற தங்களின் முந்தைய முடிவை மாற்றிக் கொண்டன. தெற்கு ஆசியாவில் நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகள் ஏற்கனவே ஒழித்துவிட்டன. சிறீலங்கா, மாலத் தீவுகள் நடைமுறையில் ஒழிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளன.

நேர்மாறாக இந்தியா மட்டும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளின் வழியில் தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்தில் விடாப்பிடியாக வைத்துக் கொண்டிருக்கிறது.

### மனித உரிமைக்கு குரல் கொடுத்த நீதிபதிகள்

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு கையெழுத்திட்டு தனித்தனியாக கடிதங்கள் எழுதியுள்ள நீதிபதிகள்:

1. பி.பி. சாவந்த் (உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி)
2. எ.பி.ஷா (டெல்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி)
3. டிபிலால் நஸ்கி (ஒரிசா உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி)
4. ஆர்.கே. மிஸ்ரா (பாட்னா உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி; கோவா மனித உரிமை ஆணையத்தின் தலைவர்)
5. ஹோஸ்பெட் சுரேஸ் (பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
6. பன்சன்த் ஜெயின் (ராஜஸ்தான் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
7. பிரபா சீனிவாசன் (சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
8. கே.பி. சிவசுப்ரமணியன் (சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
9. பி.சி. ஜெயின் (ராஜஸ்தான் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
10. எஸ்.என். பார்கவா (சிக்கிம் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி, அசாம் மனித உரிமை ஆணையத்தின் முன்னாள் தலைவர்)
11. பி.ஜி. கோல்சே பட்டீல் (பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
12. இரன்வீர் சாய் வர்மா (ராஜஸ்தான் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)
13. பி.ஏ. கான் (ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி)
14. பி.எச். மார்லபல்லே (பம்பாய் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி)

(குறிப்பு: இதில் கடைசியாக இடம் பெற்ற பெயரான நீதிபதி பி.எச். மார்லபல்லே, சிறுவன் அனுக்ஷா மாருதி ஷிண்டே உள்ளிட்டோர் வழக்கில், 6 பேரின் தூக்குத் தண்டனையை உறுதி செய்தவர். எனவே தான் வழங்கிய தீர்ப்பையே மாற்றச் சொல்வது மரபுக்கு எதிரானது என்பதால், ஏனைய 7 பேரின் தூக்குத் தண்டனையை மட்டும் குறிப்பிட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று எழுதியுள்ளார். நீதிபதி பஞ்சத் ஜெயின் ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கான கூடுதல் வாதங்களை தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.)

# செயல்களம் நோக்கி 'திராவிடர் விடுதலைக் கழகம்' சென்னை – புதுச்சேரியில் தோழர்களின் எழுச்சி





22.8.2012 புதன் கிழமை மாலை 6 மணிக்கு சென்னை தியாகராயர் நகரில் அன்பு தனசேகரன் இல்ல மாடியில், சென்னை, காஞ்சி, வேலூர் ஆகிய மாவட்டங்களின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. தோழர் குகன், கடவுள் மறுப்பு மற்றும் ஆத்மா மறுப்பைச் சொல்ல, சென்னை மண்டல அமைப்புச் செயலாளர் அன்பு தனசேகரன் வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகப் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், வழக்கறிஞர் வீ. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். அமைப்பை அடுத்தக் கட்டத்திற்கு முன்னோக்கி நகர்த்தல், கழகப் பரப்புரைகளை மக்களிடம் சேர்க்கும் பணிகள் குறித்து, கழகத் தோழர்கள் தங்கள் ஆலோசனைகளை தெரிவித்தனர். கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

சென்னை மாவட்டம்: தலைவர் - ஞா. டார்வின் தாசன்; செயலாளர் - இரா. உமாபதி அமைப்பாளர் - க.சுகுமார்; பொருளாளர் - வேழவேந்தன்; துணைச் செயலாளர் - ஆ.வ. வேலு; துணைத் தலைவர் - வ.இரவிக்குமார்; தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர்- க.ஜெயபிரகாஷ்.

மைலாப்பூர் பகுதி: தலைவர் - கி. இராவணன், செயலாளர் - பா. ஜான்சன், பொருளாளர் - பொற்செல்வம், அமைப்பாளர் - ம.மனோகர்.

திருவல்லிக்கேணி பகுதி: தலைவர் - அ. தமிழ்ச் செல்வன்; செயலாளர் - ப. செல்வகுமார்; பொருளாளர் - சு. ஆனந்தன்; அமைப்பாளர் - கி. முருகன்.

தியாகராயர் நகர் பகுதி : அமைப்பாளர் - வெங்கடேசன்.

சைதை பகுதி அமைப்பாளர் - ப.மனோகர்

புரசை பகுதி அமைப்பாளர் - ந.தட்சணாமூர்த்தி

சூளை பகுதி அமைப்பாளர் - சி. அருள்தாசு

புதுவண்ணாரப்பேட்டை பகுதி அமைப்பாளர் - ஏசு

மேடவாக்கம் பகுதி அமைப்பாளர் - மு. சக்திவேல்

பாடி பகுதி அமைப்பாளர் - மு. கனகராஜ்

வில்லிவாக்கம் பகுதி அமைப்பாளர் - சி.ஞா. ஆதவன்

தேனாம்பேட்டை பகுதி அமைப்பாளர் - இரா. பரணிக்குமார்

காஞ்சி மாவட்டம் : தலைவர் - ம. டேவிட் பெரியார், செயலாளர் - மு. தினேஷ்குமார், அமைப்பாளர் - ச.செங்குட்டுவன்.

வேலூர் மாவட்டம்: அமைப்பாளர் - ப.திலீபன்

# புதுச்சேரியில் ரூ. 3,35,000 நிதி குவிந்தது

23.8.2012 வியாழக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு புதுச்சேரி ரோமன் ரோலன் வீதியில் உள்ள கூட்டுறவு ஒன்றிய அரங்கத்தில், திராவிடர் விடுதலைக் கழக புதுவை மாநில அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கழகத் தோழர்கள் பலரும் கழக வளர்ச்சிக்கு தாங்கள் வழங்க இருக்கும் நிதியினை அறிவித்தனர். அவ்வாறு அறிவித்த மொத்த தொகை மூன்று இலட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் ரூபாய் (3,35,000) ஆகும். பின்னர் கீழ்க்கண்டவர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப் பட்டனர்.

புதுச்சேரி தலைவர் - லோகு அய்யப்பன், செயலாளர் - சு.விசயசங்கர், ஏ. சிவானந்தம், பொருளாளர் - மு. சிவபெருமாள், அமைப்பாளர் - இரா. தந்தைபிரியன், துணைத் தலைவர் - இரா. வீராசாமி, துணைச் செயலாளர் - பு. சிவக்குமரன்.

இளைஞரணி தலைவர் - இரா. அன்பெழிலன், செயலாளர்கள் - வெ. இராசா, இரா. இராசா (குருவிநத்தம்), அமைப்பாளர் - கி. வேலன், துணைத் தலைவர் - கா.தாசு, துணைச் செயலாளர்கள் - கு.சங்கர், கரிக்கலாம்பாக்கம் கணேசன்.

மாணவரணி அமைப்பாளர் - சி. இராமசாமி.

மகளிரணி அமைப்பாளர் - சி. சிவகாமி.

புதுச்சேரி நகரக் கழகத் தலைவர் - சி. சார்லஸ், செயலாளர் - கோ. இராசேந்திரன், பொருளாளர் - மு.வி. இளைய குமரன், அமைப்பாளர் - ச. விசயன், துணைத் தலைவர் - அ. கனகராசு, துணைச் செயலாளர் - சு. தட்சுணா மூர்த்தி, துணை அமைப்பாளர் - பீ. கிருட்டிணமூர்த்தி.

அரியாங்குப்பம் பகுதி பொறுப்பாளர்கள் : தலைவர் - பா. எத்திராசு, செயலாளர் - ஆ. ஆனந்தன், பொருளாளர் - செ. சத்தியமூர்த்தி, அமைப்பாளர் கோ. சேனாதிபதி, துணைத் தலைவர் - க. கார்த்திகேயன், துணைச் செயலாளர் - கு. உதயகுமார், துணை அமைப்பாளர் - மு. முகமது சிக்கந்தர்.

மில்லர் விளையாட்டுக் கழகம் : தலைவர் - இ. இரவிச்சந்தர், செயலாளர் - க. முருகராஜ், பொருளாளர் - பா.இராஜி (எ) சண்முகம், துணைச் செயலாளர் - அரங்க. சக்திவேல்.






# கே.ஜி. வலசு பகுதியில் சாதி ஆதிக்கவாதிகள் மிரட்டலை முறியடித்து கழகக் கூட்டம்

ஆதிக்க சக்திகளின் கடுமையான எதிர்ப்புகளுக்கும் வதந்திகளுக்கும் மத்தியில் ஏராளமான பொது மக்கள் திரளுடன் நடைபெற்றது பெரியாரியல் பொதுக் கூட்டம்.

4.8.2012 சனிக் கிழமை மாலை 6 மணிக்கு, ஈரோடு மாவட்டம் சென்னிமலை அருகே உள்ள கே.ஜி. வலசு பகுதியில், ஈரோடு பகுத்தறிவாளர் பேரவை சார்பாக பெரியாரியல் விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

வழக்கமாக மற்ற கட்சிகள் பொதுக் கூட்டம் நடைபெறும் இடமான கே.ஜி. வலசு நால்ரோடு பகுதியை தேர்வு செய்த நமது தோழர்கள், காவல் நிலையத்தில் தெரிவித்துவிட்டு கூட்டத்திற்கான விளம்பரங்களையும் செய்திருந்தனர். ஆனால், இந்த இயக்கத்தை இப்பகுதியில் காலூன்ற விட்டால் தமது மேலாதிக்க தன்மை போய்விடும் என்று கருதிய, அப்பகுதியிலுள்ள ஜாதி ஆதிக்கவாதிகள் சிலர், கூட்டம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, காவல் நிலையத்தில் கூட்டம் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. நமது தோழர்களும் மாற்று இடத்தில் அங்கிருந்து சற்று தொலைவிலுள்ள மதுரை வீரன் கோவில் அருகில்) கூட்டம் நடத்திக் கொள்ள ஒப்புதல் தெரிவித்தனர்.

ஆனாலும், விடாத ஜாதி ஆதிக்கவாதிகள் இக்கூட்டத்தை எங்கும் நடத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது என்ற எண்ணத்துடன், இறுதியாக தேர்வு செய்த இடத்தின் அருகிலுள்ள மதுரை வீரன் கோவிலை காரணம் காட்டி, அந்த கோவிலுக்கும் அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் அப்பகுதி மக்களை சந்தித்து மிரட்டி, ஊருக்கு 1 கி.மீ. தூரம் உள்ள நிலையிலும், உங்களின் கோவிலுக்கு அருகில் கூட்டம் நடத்த நீங்கள் அனுமதிக்கக் கூடாது; மீறி அனுமதித்தால் நீங்கள் மதுரை வீரன் கோவிலுக்குள் நுழைய நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஏனென்றால் மதுரை வீரன் கோவில் எங்களுக்குச் சொந்தமான பட்டா நிலத்தில் உள்ளது என்று அந்த மக்களை மிரட்டியுள்ளனர். மேலும் அந்தப் பகுதி (வடுக பாளையம்) தோழர்கள் சிலர், நாம் அண்மையில் வெள்ளோடு பகுதியில் நடத்திய பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சமீபத்தில் கழகத்தில் இணைந்தவர்கள். இவர்களின் பெயர்கள் கேஜி.வலசு பொதுக் கூட்ட துண்டறிக்கையில் போடப்பட்டிருந்தது. பெயர் போடப்பட்ட தோழர்களின் பெற்றோர்களிடம் சென்ற ஆதிக்கவாதிகள், இவ்வாறு பெரியார் இயக்க துண்டறிக்கையில் பெயர் போட்டால் உங்கள் பிள்ளைகளை காவல்துறை கைது செய்துவிடும். மேலும் அவர்களின் வேலைகள் பறிக்கப்பட்டுவிடும் என்று பொய்யான தகவல்களை சொல்லி பயமுறுத்தியதோடு, இந்தக் கூட்டத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்துவிட சொல்லுங்கள் என்றும் சொல்லியுள்ளனர். பயந்துபோன பெற்றோர்கள் அவ்வாறு தங்கள் பிள்ளைகளை வலியுறுத்தியும் அந்த தோழர்கள் அவ்வாறு எழுதிக் கொடுக்க மறுத்துவிட்டனர். எனவே தோழர்களின் பெற்றோர்களும் காவல் நிலையம் சென்று எதிர்ப்பு தெரிவிக்க ஆதிக்க சக்திகளால் தூண்டிவிடப்பட்டனர்.

கூட்டத்திற்கு முதல் நாள் காவல் நிலையத்தில் மீண்டும் இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இந்தச் சூழலில் சென்னிமலை காவல் துறையினர் மிகவும் நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்து கொண்டனர். இந்த பெரியார் இயக்கத்தைப் பற்றி எங்களுக்கு நன்கு தெரியும். சில மாதங்களுக்கு முன்பு சென்னிமலையில் காவல் நிலையம் முன்பே 'நாத்திகர் விழா' பொதுக் கூட்டம் யாருக்கும் இடையூறு இல்லாமல் நடத்தினர். எல்லோருக்கும் கூட்டம் நடத்தும் உரிமை இருக்கிறது. எனவே நீங்கள் ஒத்துழைப்புக் கொடுங்கள். நாங்களும் பாதுகாப்புக்கு வருகிறோம் என்று பக்குவமான முறையில் பேசி சம்மதிக்க வைத்தனர்.

ஆனாலும், அப்போதும் ஆத்திரம் தீராத ஜாதி ஆதிக்கவாதிகள், கூட்டத்திற்கு முன்னிலை வகிக்க இருந்த ஊராட்சி மன்றத் தலைவர் இரவி அவர்களை கூட்டத்திற்கு வரவிடாமல் தடுத்ததோடு, வடுகபாளையம் பகுதி மக்களையும் மிரட்டி ஒருவரைகூட வரவிடாமல் தடுத்துவிட்டனர்.




இவ்வாறாக எழுந்த தொடர் எதிர்ப்புகளே நமக்கு ஒரு இலவச விளம்பரத்தையும், கூட்டம் பற்றிய ஒரு எதிர்பார்ப்பையும் தூண்டிவிட்டது.

மேலும் மூன்று நாட்களாக நமது கழகத் தோழர்கள் பகுத்தறிவு பேரவை சிவக்குமார், செல்வராசு, செல்லப்பன், இசைக் கதிர், கார்த்திகேயன், மூர்த்தி, வெங்கட், இரமேசு மற்றும் இளம்பிள்ளை சந்திரசேகர் ஆகியோரின் தொடர் வாகனப் பரப்புரை காரணமாகவும், சேலம் கோகுலக் கண்ணனின் தெருமுனை 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியிலும் ஈர்க்கப்பட்டு 500க்கும் மேற்பட்ட பொது மக்கள் திரண்டிருந்தனர்.


பரபரப்போடும், எதிர்பார்ப்போடும் நடைபெற்ற இந்த பொதுக் கூட்டத்திற்கு செ. சசிக்குமார் தலைமையேற்றார். இரமேசு வரவேற்புரையாற்றினார். பகுத்தறிவாளர் பேரவை பெ.சே. மோகன்ராசு முன்னிலை வகித்தார். நான்காம் வகுப்பு படிக்கும் மாணவி மதுமிதா, தந்தை பெரியார் பற்றி உரையாற்றிய விதம் அனைவரையும் கவர்ந்தது. 'அவர் தாம் பெரியார்' என்ற தலைப்பிலும் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி காயத்ரி கவிதை நடையிலும் உரையாற்றினர். மேலும் செல்லப்பன், பகுத்தறி வாளர் பேரவை சிவக்குமார், ஈரோடு ப. இரத்தின சாமி, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோரும் உரையாற்றினர்.

நிகழ்ச்சியின் துவக்கத்திலும், பேச்சாளர்களின் இடையிடையேயும், சிற்பி இராசன் அவர்களின் மந்திரமல்ல, தந்திரமே நிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக உரையாற்றிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மனுதர்மம் பற்றியும் அது உழைக்கும் மக்களை தாழ்வுபடுத்துவது பற்றியும், பார்ப்பனர்களின் சூழ்ச்சிக் குறித்தும் விரிவாக உரையாற்றினார். கூட்டத்தின் நிறைவாக ந. அழகன் நன்றி கூறினார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சசிக்குமார் தலைமையிலான கருங்கவுண்டன் வலசு தோழர்கள் தங்கராசு, வீ. தங்கராசு, தவமணி, ராமசாமி, லட்சுமணன், கோபி ஆகியோர் செய்திருந்தனர்.

## மின் நெருக்கடி: திருச்சியில் சமூக தணிக்கை மாநாடு

25.8.2012 சனிக்கிழமை அன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை திருச்சி புத்தூர் நாலு ரோடு அருகில் உள்ள சண்முகா திருமண அரங்கில், "தமிழக மின் நெருக்கடி சமூக தணிக்கை மாநாடு" நடைபெற்றது. கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்ற இந்த மாநாட்டை வழக்கறிஞர் ஜோ. கென்னடி ஒருங்கிணைத்தார்.




கூடங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பு ஒருங் கிணைப்பாளரும், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவருமான கொளத்தூர்மணி தலைமையேற்று இந்த மாநாட்டை துவக்கி வைத்தார். வழக்கறிஞர் த. பானுமதி வரவேற்புரையாற்றினார். கண குறிஞ்சி, மீ.த. பாண்டியன், அரங்க. குணசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மொத்தம் நான்கு தலைப்புகளின் கீழ் நான்கு அமர்வுகளாக நடைபெற்றது.

முதல் அமர்விற்கு வழக்கறிஞர் மார்ட்டின் தலைமையேற்க, "இந்திய மின்சார துறையின் கொள்கைகளின் பரிணாமம்" என்ற தலைப்பில் உழவர் தாளாண்மை இயக்கத் தலைவர் பொறிஞர் கோ. திருநாவுக்கரசு சிறப்புரையாற்றினார்.

இரண்டாம் அமர்விற்கு கோ. திருநாவுக்கரசு தலைமையேற்க, "மின்வாரிய மேலாண்மையும் தமிழக மின்சார நெருக்கடியும்" என்ற தலைப்பில் தமிழ்நாடு மின்துறைப் பொறியாளர்கள் அமைப்பு தலைவர் சா. காந்தி சிறப்புரையாற்றினார்.

மூன்றாம் அமர்விற்கு பொன். சந்திரன் தலைமையேற்றார். "நீடித்த வளர்ச்சிக்கு மாற்று மின் உற்பத்தி முறைகள் மற்றும் மின் மேலாண்மை" என்ற தலைப்பில் பொறிஞர் பிரகாஷ் சிறப்புரையாற்றினார்.

நான்காம் அமர்விற்கு சேவ் தமிழ்ஸ் இயக்கம் செந்தில் தலைமையேற்றார். "அணு உலை அரசியலும், மின்சாரமும்" என்ற தலைப்பில் பேராசிரியர் சிவக்குமார் சிறப்புரையாற்றினார்.

வழக்கறிஞர் அ. கமருதீன் நிகழ்ச்சியை நெறிப் படுத்தி வழங்கினார். சுரேஷ் நன்றியுரையாற்றினார்.


## திருச்சி மாவட்டக் கழகத் தலைவர் இல்ல மணவிழா

*26.8.2012 சனிக்கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு திருச்சி தெற்கு காட்டூர் அ.பா. சிவந்தி ஆதித்தனார் சமுதாயக் கூடத்தில் திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் ஆரோக்கியசாமி மகள் ஆ. தமிழரசி - எஸ். ஆரோக்கிய அன்னதங்க ராஜா இணையினரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.*

பெரம்பலூர் மாவட்ட கழகத் தலைவர் துரை தாமோதரன், 'மந்திரமல்ல தந்திரமே!' என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தினார். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

கழகத் தலைவருடன் மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன் மற்றும் திருச்சி மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# பிரிட்டிஷ் ஆட்சியின் மனித நேயமும் பார்ப்பன ஆட்சியின் 'மனுதர்மமும்'



பிரிட்டிஷ் ஆட்சி காட்டிய கவலையைக்கூட இந்திய "சுதந்திர" ஆட்சி தூக்குத் தண்டனைக் கைதிகளிடம் காட்ட முன்வரவில்லை. கிரிமினல் குற்றங்களில் தூக்குத் தண்டனைக்குள்ளாவோர் பெரும்பாலும் பார்ப்பனரல்லாத 'சூத்திரர்களும்', 'பஞ்சமர்களும்' தான் என்பதால் மனுதர்மப் பார்வையுடனே இந்திய பார்ப்பன ஆட்சி செயல்பட்டு வருகிறது.

பிரிட்டிஷ் ஆட்சி காலமான 1937 ஆம் ஆண்டில் நடந்த ஒரு வழக்கைக் குறிப்பிட வேண்டும். அப்போது கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை மட்டுமே விதிக்கப்பட்டு வந்தது. 'அத்தப்பா கவுண்டன்' என்பவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் விசாரணை வந்தது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரின் ஒப்புதல் வாக்குமூலத்தை அப்படியே ஏற்றுக் கொண்டு தூக்குத் தண்டனை வழங்கலாம் என்று கீழ் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்தது. ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்க முடியாது என்று மற்றொரு நீதிமன்றம், விளக்கம் கூறி, தூக்குத் தண்டனையை நிறுத்தியது. ஒப்புதல் வாக்கு மூலத்தையே சாட்சியமாக ஏற்றுக் கொண்டால், அது, குற்றவாளிக்கு தண்டனையை உறுதிப்படுத்திவிடும். ஏற்க மறுத்தால், குற்றவாளிக்கு சாதகமாக அமையும். இந்த நிலையில், வழக்கை சென்னை மாகாண உயர்நீதிமன்றம் கூடுதல் நீதிபதிகள் விசாரிக்கக்கூடிய மேல் அமர்வு விசாரணைக்கு அனுப்பியது. 'மேல் அமர்வு' ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்கலாம் என்று தீர்ப்பளித்தது. இத் தீர்ப்பு பிரிட்டிஷ் இந்தியாவின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி முழுதும் அமுலாக்கப்பட்டு, பல குற்றவாளிகளில் தூக்கிலிடப்பட்டனர்.

1945 ஆம் ஆண்டு இதே போன்ற பிரச்சினை மீண்டும் சென்னை மாகாண உயர்நீதிமன்றத்தின் முன் வந்தது. இது புலுக்கரி கோட்டயா உள்ளிட்ட 7 பேருக்கு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்காகும். மாவட்ட நீதிமன்றம் வழங்கிய தூக்குத் தண்டனையை உயர்நீதிமன்றம் 'அத்தப்பா கவுண்டன்' வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் உறுதி செய்துவிட்டது. பாதிக்கப்பட்டவர்கள் வழக்கை லண்டனில் உள்ள 'பிரிவிக் கவுன்சிலுக்கு' மேல் முறையீடு செய்தனர். பிரிவி கவுன்சிலில் இடம் பெற்றிருந்த பிரிட்டிஷ் நீதிபதிகள், ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்பது தவறு; சாட்சிகள் சட்டத்தின் 27 பிரிவுக்கு இது எதிரானது என்று அறிவித்தனர்.

பிரச்சினை இத்துடன் முடியவில்லை. ஏற்கனவே 'கவுண்டன்' வழக்கு அடிப்படையில் பலர் தூக்கிலிடப்பட்டு விட்டனர். இன்னும் ஏராளமானோர், தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருந்தனர். இந்த நிலையில் சென்னை மாகாண ஆட்சி நிர்வாகம், ஆணையம் ஒன்றை அமைத்து, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அனைத்து வழக்குகளையும் பரிசீலித்தது. அதனடிப்படையில் 'அத்தப்பா கவுண்டன்' தீர்ப்பு அடிப்படையில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியிருந்த அனைவருமே பிரிவி கவுன்சில் உத்தரவின்படி நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

இது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட நீதியாகும். ஆனால், இந்திய பார்ப்பன ஆட்சியில் என்ன நடக்கிறது? 'ராவ்ஜி' குழுவினர் தவறான தீர்ப்பால் தூக்கிலிடப்பட்டும்கூட உச்சநீதி மன்றம் இந்த தவறான தீர்ப்பை முன்னுதாரணமாக 9 ஆண்டுகளாக பின்பற்றியுள்ளது. இதை உச்சநீதி மன்றமே ஒப்புக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டி, கடந்த 2 ஆண்டுகளாக மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும், ஆளுநர்களுக்கும், குடியரசுத் தலைவர்களுக்கும் ஏராளமான முறையீட்டுக் கடிதங்கள் எழுதப்பட்டன. ஆனால், எவரும் இது குறித்து கவலைப்படவே இல்லை. "தூக்கில் போடு; தூக்கில் போடு" என்ற வெறிக் கூச்சல்களே உரத்துக் கிளப்பிக் கொண்டிருந்தன.


தவறான தீர்ப்பின் அடிப்படையில் தூக்கில் போட்டுவிடக் கூடாது என்று இந்தியர்கள் மீது கவலை எடுத்துச் செயல்பட்டது 72 ஆண்டுக்கு முந்தைய பிரிட்டிஷ் ஆட்சி. ஆனால், சுதந்திர இந்தியா....?

தவறான தீர்ப்புகளுக்குப் பிறகும், 'குடிமக்களை' தூக்கிலிட்டுக் கொண்டே இருந்தது.

# 'கருணை மனுக்களை நீண்டக்காலம் கிடப்பில் போடுவதால் தண்டனைக்குறைப்புக் கோருவது நியாயம்தான்



*2008 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரை உச்சநீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றவர் ஏ.கே. கங்குலி, 2 ஜி அலைவரிசை ஒதுக்கீடு வழக்கு உட்பட பல வழக்குகளில் முக்கிய தீர்ப்பளித்தவர். இப்போது மேற்கு வங்க மனித உரிமை ஆணையத்தின் தலைவர், 'பிரண்ட்லைன்' பத்திரிகைக்கு அவர் தூக்குத் தண்டனை தொடர்பாக அளித்த பேட்டியில் வெளியிட்ட சில முக்கிய கருத்துகள்.*



- 'அரிதிலும் அரிதான' வழக்கில் மட்டுமே தூக்குத் தண்டனை விதிக்க முடியும் என்று 'பச்சன்' வழக்கில் உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பில் வலியுறுத்தப்பட்ட நெறிமுறை மீறப்பட்டு பல வழக்குகளில் தவறாகத் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது உண்மை. இருந்தவரை நான் ஒப்புக் கொள்கிறேன்.
- கருணை மனு குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டு அது நீண்ட காலம் கிடப்பில் போடப்பட்டு விட்டால் அதனடிப் படையிலேயே தூக்குத் தண்டனையை ரத்து செய்யலாம் என்ற கருத்தை நான் ஏற்கிறேன். உச்சநீதிமன்றமே, இந்த அடிப்படையில் தண்டனையை ரத்து செய்துள்ளது.
- (பம்பாய் குண்டு வெடிப்பில் தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள) அஜ்மல் கசாப்பின் இளம் வயது அவர் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக இழைத்த குற்றம் என்ற இரண்டு அடிப்படையில் அவரை தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்கலாம். ஆனாலும், நீதிபதியின் மனசாட்சிதான் இதில் தீர்ப்பாக இருக்க முடியும். வழக்கு விசாரணையில் இருக்கும்போது நான் இதில் உறுதியாக கருத்து கூறுவது நீதிமன்றத் தலையீடாகிவிடும்.
- 'தீவிரவாத இயக்கத்தோடு' தொடர்புடையவர்கள் என்றும், அந்த இயக்கத்தில் பங்கெடுத்தார்கள் என்றும் அதன் காரணமாகவே ஏனையோருக்கு வழங்கப்படும் 'தண்டனைக் குறைப்பை' அனுமதிக்க முடியாது என்றும் கூறுவது சரியான கருத்து அல்ல. தண்டனைக் குறைப்புக்கு சட்டபூர்வமான விதிகள் ஏதும் கிடையாது. தண்டனைக் குறைப்பு கோருவோரின் நடத்தை, குற்றமிழைத்ததற்கான சூழ்நிலை, கடந்தகால குற்றச் செயல்கள், சமூக மற்றும் குடும்பப் பின்னணி போன்றவை கவனத்தில் எடுத்துத்தான் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது.
- 1967 ஆம் ஆண்டு 35வது சட்ட ஆணையத்தின் அறிக்கையில் இந்தியா போன்ற பெரிய பல்வேறு இனங்கள் வாழும் நாட்டில் மரண தண்டனை தேவை என்று பரிந்துரைக்கப்பட்டது. அந்த அடிப்படையில் ஜெகமோகன் வழக்கில் மரணதண்டனை சட்டபூர்வமாக நிலைநிறுத்தப்பட்டது. 1980 இல் பச்சன்சிங் வழக்கில் அரிதிலும் அரிதான வழக்குக்கு மட்டுமே மரணதண்டனை என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கும் அதே சட்ட ஆணையத்தின் பரிந்துரை தான் சுட்டிக்காட்டப்பட்டது. 1967க்குப் பிறகு உலகில் பல நாடுகள் தூக்குத் தண்டனையை ஒழித்துவிட்டன. மாறி வரும் சர்தேச சூழலைக் கருத்தில் கொண்டு இந்திய சட்ட ஆணையம் தனது கருத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றே நான் கருதுகிறேன்.
- ஆயுள் தண்டனை என்றால் வாழ்நாள் இறுதி வரை சிறையிலேயே கழிக்க வேண்டும் என்ற கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. தண்டனைக்கான நடைமுறைகளை நீதிமன்றமே வகுத்துக் கொள்ளக் கூடாது. இதற்கெல்லாம் சட்டங்கள் கிடையாது. வாழ்நாள் முழுதும் சிறையில் இருக்க வேண்டும் என்பது, ஒரு கைதியின் அடிப்படை உரிமையை பறிப்பதாகும். சட்டத்தின் 72வது பிரிவின் கீழ், குடியரசுத் தலைவரிடமோ, 161வது பிரிவின் கீழ் மாநில ஆளுநரிடமோ தண்டனைக் குறைப்போ அல்லது பொது மன்னிப்பையோ கோரும் உரிமையை இதனால் ஒரு கைதி இழந்து விடுகிறார். இது 21வது அரசியல் சட்டப் பிரிவு வழங்கியுள்ள அடிப்படை உரிமைக்கு எதிரானது.
- தூக்குத் தண்டனை வழங்கும் வழக்குகளை குறைந்தது மூன்று நீதிபதிகள் விசாரிக்க வேண்டும். அனைவரும் ஒருமித்து தீர்ப்பு வழங்கினால் மட்டுமே தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டும்; தீர்ப்புகள் மாறுபட்டிருந்தால் தூக்குத் தண்டனை அளிக்கக் கூடாது என்பதே என் கருத்து.
- காந்தி, தாகூர், அம்பேத்கர், நேரு போன்ற மகத்தான தலைவர்களின் கொள்கைகளை உண்மையாக பின்பற்ற வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் செழுமையடையும். அவர்களின் படங்களுக்கு மாலை அணிவிப்பதால் மட்டும பயனில்லை. காந்தியை தேசத் தந்தையாக நாம் ஏற்கிறோம். ஆனால், தூக்குத் தண்டனை தேசத் தந்தை கொள்கைக்கு எதிரானது அல்லவா? - என்கிறார் நீதிபதி கங்குலி.



## ஜாதிஒழிப்புப்போராளி இம்மானுவேல்சேகரன் நினைவுநாள்

ஜாதி ஒழிப்புப் போராளி இம்மானுவேல் சேகரன் நினைவு நாளான 11.9.12 செவ்வாய் அன்று பிற்பகல் 2 மணியளவில் பரமக்குடியில் உள்ள இம்மானுவேல் சேகரன் நினைவிடத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் வீரவணக்க - ஜாதி ஒழிப்பு உறுதியேற்பு நிகழ்வு நடைபெற உள்ளது.

கழகத்தின் திருப்பூர் மாவட்டத் தலைவர் க. துரைசாமி தலைமையில் மாநில பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால். பிரபாகரன் மற்றும் மாநில அமைப்புச் செயலாளர், தாமரைக் கண்ணன் மண்டல அமைப்புச் செயலாளர்கள், தென் மாவட்டங்களின் பொறுப்பாளர்களும், தோழர்களும் பங்கேற்க உள்ளனர். திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டியில் ஒன்றுகூடி அங்கிருந்து பரமக்குடிக்குப் பயணமாக உள்ளனர்.

வீரவணக்க நிகழ்வில் பங்கேற்க விரும்பும் தோழர்கள் 11.9.12 செவ்வாய் காலை சரியாக 10 மணிக்கு செம்பட்டிக்கு வருமாறு அழைக்கிறோம். மற்ற மாவட்டப் பொறுப்பாளர்கள் தத்தம் மாவட்டங்களில் ஜாதி ஒழிப்புப் போராளி இம்மானுவேல் சேகரன் நினைவு நாளை, ஜாதி ஒழிப்பு உறுதி மொழியேற்று பொதுக் கூட்டங்களாக நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**– கொளத்தூர் தா.செ. மணி**
*தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# என்னை "மகாத்மா" வாக்கி விடாதீர்கள்!



நண்பர்களே, முதலில் ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ளுகிறேன். அதாவது சாப்பாட்டு ஜாகைக்குப் போகும் வழியில் என்னைப் பற்றியும், என் மனைவியைப் பற்றியும் சுவர்களில் கண்டபடியெல்லாம் எழுதியிருந்தது. மற்றும் சிலரைப் பற்றியெல்லாம் எழுதி இருந்தது.

நண்பர்களே என்னைப் பொறுத்தவரை நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுவும் என் மனப்பூர்த்தியாய்ச் சொல்லுகிறேன். என்னவென்றால், என்னை ஒருவர் மகாத்மா என்றோ, தெய்வத் தன்மைப் பொருந்தியவர் என்றோ, சித்தர் என்றோ, புத்தர் என்றோ, ஞானி என்றோ கூப்பிடுவதைவிட, கருதுவதைவிட என்னை அயோக்கியன் என்றும் திருடன் என்றும், முட்டாள் என்றும் சுயநலக்காரன் என்றும், பணம் சம்பாதிப்பவன் என்றும் மற்றும் இழிவான வேலை செய்கின்றவன் என்றும் சொல்லுவதில் எனக்கு லாபம் இருக்கின்றது என்று கருதுகிறேன்.

ஏனெனில், எனது வேலையானது இராமசாமி என்று ஒரு மகாத்மாவோ, மற்றும் தெய்வத் தன்மை பொருந்திய ஒரு ஒப்பற்ற மனிதர் இருந்தார் என்று மூட ஜனங்கள் சொல்லிக் கொள்ளவோ, எனது படத்தைப் பூஜையில் வைத்துப் பூஜிக்கவோ, தேரில் வைத்து இழுக்கவோ, கோவிலில் என் பேரில் விக்கிரகம் செய்து பூஜை, உற்சவம் செய்யவோ நான் கருதவில்லை. அந்தக் குணத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று கருதி வெளிப்பட்டவன். ஆகவே என்னை அக்கதிக்கு ஆளாக்காதவர்களே எனது நண்பர்கள் ஆவார்கள். எனது கொள்கைக்கும் துணை புரிந்தவர்களாவார்கள்.

ஏனெனில், வண்ணான், நாவிதன், பறையன், பள்ளன், செட்டி, நாயக்கன், நாடார் என்று சொல்லப்பட்ட இழிகுல மக்கள் என்பவர்கள் எல்லாம் இன்று ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியும், பூஜித்தும், உற்சவம் செய்யப்பட்டும் நாட்டுக்கோ அச்சமூகங்களுக்கோ ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்கிறேன். அதன் பேரால் அவர்கள் கதைகளைச் சொல்லி சிலர் வயிறு வளர்க்கின்றார்கள். சிலர் சோம்பேறிகளாய் வாழ்கிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதுபோலவே இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்த சுவாமிகள்; இராமலிங்க வள்ளலார் என்கிற சமீபகால மக்களால் நாட்டுக்கு ஏற்பட்ட பயன் என்ன? இவர்கள் படம் பூஜிக்கப்படுவது எனக்குத் தெரியும். 100க்கு 75 மக்களுக்கும் தெரியும். ஆனால் 100க்கு ஒருவருக்கு நடந்த நன்மை என்ன? அதுபோலவே இன்று பிரத்தியட்சத்தில் இருக்கும் காந்தி மகாத்மாவும், திருப்பாலக்குடி மஸ்தான் வணங்கப்படுவதும், அவதாரமாகவும் நபியாகவும் கருதப்படுவதும், அதோடு மாத்திரமல்லாமல் அவர்களது மலம் முதல் சுவாசக்காற்று வரை மதிக்கப்படுவதும் எனக்குத் தெரியும்.

திரு. காந்தியைவிட மஸ்தான் சாயுபுக்கு உண்மையிலேயே மதிப்பு அதிகம் என்பது எனக்குத் தெரியும். ஏனெனில், அனேகர் திரு. காந்தியை மனிதராகக் கருத வேண்டுமென்றே தங்கள் சுயநலத்திற்கும், ஆதிக்கத்திற்கும், வயிற்று வளர்ப்புக்கும் திரு. காந்தியை ஏமாற்றுவதற்கும் அவரை மகாத்மா என்று சொல்லுகிறவர்கள், திருப்பாலக்குடி சாயபுவை உண்மையிலேயே தெய்வத் தன்மை பொருந்தியவராக மதித்துப் பூஜித்து வருகிறார்கள். எங்கள் ஊரிலிருந்து அநேக பி.ஏ., பி.எல்., எம்.ஏ., முதலியவர்களும், உயர்ந்த சாதியார் பிராமணர் என்று தங்களை சொல்லிக் கொள்ளுபவர்களுமே போய் அவரது எச்சிலை சாப்பிட்டுவிட்டும் வந்தார்கள். எச்சில் கலந்த தண்ணீரே பழனி பஞ்சாமிர்தம் போல் டின்னில் அடைத்துக் கொண்டு வந்து இருக்கின்றார்கள். ஆனால், இவர்களால் நாட்டிற்கு ஏற்பட்ட பலன் என்ன? என்று கேட்கிறேன்.

திருப்பாலக்குடி சாயுபை ஒரு சாதாரண மனிதன் என்று எண்ணாத காரணத்தால் அவரது எச்சில் கலந்த தண்ணீரைக் குடித்து லாபம் பெறலாம் என்று கருதி மக்கள் மூடர்களாக வேண்டியதாயிற்று. அதுபோலவே திரு. காந்தியை மகாத்மா என்று கருதியதால், அவரது காரியத்தால் ஏற்படும் தீமைகளும், நஷ்டங்களும், இழிவுகளும் எல்லாம் அதற்கு மாறாகக் கருப்பட வேண்டியதாயிற்று. ஆனால், என்னுடைய காரியங்களுக்கு அப்படிப்பட்ட விபரீதப் பலன் ஏற்பட வேண்டாம் என்றே கருதுகிறேன். எனக்காக எந்த மனிதனும் எவ்வித நஷ்டமும் அடைய வேண்டாம். எதையும் நம்ப வேண்டாம். நான் கூறுபவைகளை வெகுஜாக்கிரதையாய் அலசிப் பார்க்க வேண்டுமென்றே ஆசைப்படுகிறேன். ஆகையால் நான் தெய்வத்தன்மை பொருந்தியவனாகக் கருதப்பட்டுவிட்டால், மக்கள் என் வார்த்தையை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். நான் அயோக்கியன் என்று சொல்லப்பட்டால் என் வார்த்தைகள் மிகவும் ஜாக்கிரதையாக கவனிக்கப்படும். உதாரணமாக இன்றைய கீதை என்பதை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இருக்கும் அக்கிரமம், தந்திரம், முன்னுக்குப் பின் முரண், மக்களை மக்கள் இழிவுபடுத்துவது என்பவைகள் யாருடைய புத்திக்காவது விளங்குகின்றதா? ஏன் விளங்கவில்லை? அதைச் சொன்ன மனிதனை இன்னான் என்றோ எதற்காகச் சொன்னான் என்றோ உணர முடியாமல், பகவான் சொன்னார் என்று சொல்லப்பட்டதால் இன்றைய உலக மக்கள் எல்லோருக்குமே அது பொருந்துவதாகும் என்று சொல்லக்கூடிய அளவுக்குப் புகழப்படுகின்றது. அதுபோலவேதான் புராணங்கள், சாத்திரங்கள், வேதங்கள் என்கின்ற ஆபாசக் களஞ்சியங்கள் எல்லாம் மதிக்கப்படுகின்றன.

ஆகவே, அந்தப்படி மதிக்கப்படாமல் எனது வார்த்தைகள், அபிப்பிராயங்கள் அதற்குண்டான சரியான மதிப்புப் பெற வேண்டுமானால், நான் அயோக்கியனாகவும், பணம் சம்பாதிப்பவனாகவும், திருடனாகவும் கருதும்படியாகப் பிரச்சாரம் செய்பவர்கள். உதவி செய்தவர்களாகவே ஆவார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதத் தன்மைக்கு மீறிய எந்த குணத்தையும் என் மீது சுமத்திவிடாதீர்கள்.

தூத்துக்குடியில் சுமார் 20, 30 சுவர்களில் 'இராமசாமிக் கழுதைக்கு செருப்படி' என்று எழுதியிருந்தது. ஆனால் இதுவரை அடி விழுகவில்லை. இங்கும் 'இராமசாமி கழுதை செத்துப் போய்விட்டது' என்றும், 'இராமசாமியின் மனைவி நாகம்மாள் அவிசாரி' என்றும் எழுதி இருந்தது.

இராமசாமிப் பெரியார் சிரஞ்சீவியாய் இருக்க வேண்டும் என்று எழுதியிருந்ததைப் பார்த்து சந்தோஷப்பட்டிருந்தேனேயானால் இராமசாமிக் கழுதை செத்துப் போய்விட்டது என்பதற்கு நான் வருத்தப்பட வேண்டும். அது போலவே இராமசாமி மனைவி கற்புக் கரசி என்று எழுதி இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்து மாதம் மும்மாரி மழை வரச் செய்து பயன்பெற்று இருந்தால், இராமசாமி மனைவி நாகம்மாள் அவிசாரி என்பதற்கு நான் விசனப்பட வேண்டும். ஆகவே அதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால், இவைகளிலிருந்து ஒரு அளவுக்கு நான் வெற்றிப் பெற்றுவிட்டேன் என்பதை மாத்திரம் உணருகிறேன். என்னை அறியாமலே நான் ஏதாவது மதிப்புப் பெற வேண்டுமென்று கருதி இருந்தாலும் நானே எனக்குத் தீங்கு தேடிக் கொண்டவனேயாவேன்.

**பெரியார், 'குடிஅரசு' 11.10.931**

## மயிலாடுதுறை மகேஷ் – இளவரசி சாதி மறுப்பு மணவிழா



நாகை மாவட்டக் கழகச் செயலாளர் தெ.மகேஷ் - செ. இளவரசி ஜாதி மறுப்பு மணவிழா 19.8.2012 ஞாயிறு காலை 9 மணியளவில் மயிலாடுதுறை விமலாம்பிகை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணவிழாவை நடத்தி வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மண்டல அமைப்பாளர் இளையராசா, பத்திரிகையாளர் சுகுணா திவாகர், ரஷித்கான் வாழ்த்துரை வழங்கினர். கழக ஏட்டுக்கு மணமகன் ரூ.2000 நன்கொடையும், மாவட்டக் கழத்துக்கு ரூ.15000 மதிப்புள்ள புதிய ஒலிபெருக்கி கருவியையும் வழங்கினார். 'திராவிட' எதிர்ப்பாளர்களுக்கு ஆதாரங்களுடன் பதிலளிக்கும் தோழர் கவி எழுதிய 'தமிழ்த் தேசத் தந்தை பெரியார்' எனும் நூல் மணவிழா பரிசாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற மணவிழாக்கள்

21.8.2012 செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு கரூர் கொங்கு திருமண மண்டபத்தில் மருத்துவர் பழ. பாலகிருஷ்ணன் மகன் மருத்துவர் பா.பாவேந்தன் - சா. மேகலா இணையரது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

23.8.2012 வியாழக்கிழமை அன்று காலை 8 மணிக்கு, காஞ்சிபுரம் ஜவுளிக்கடை வியாபாரிகள் திருமண மண்டபத்தில், த. பாலசுதர்சன் - கு.சந்தியா ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா, திருவள்ளுவர் பெரியார் மானுட ஒன்றியம் அற்புதம் மாள் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத் தூர் மணி வாழ்க்கை ஒப்பந்தத்தை நடத்தி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

## நன்கொடை


சேலம் மாவட்டம் கொளத்தூர் நகரக் கழகத் தலைவர் மாது மகன் பிரபாகரன் - சங்கீதா இணையரின் மகன் ச.பி. அகிலனின் முதலாம் ஆண்டு பிறந்த நாள் மகிழ்வாக கழக ஏட்டிற்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st August 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.


புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | செப்டம்பர் 06, 2012 | புரட்சி 11 | முழக்கம் 34 | விலை: ரூ.2.50

## திராவிடர் விடுதலைக் கழக கலந்துரையாடல் கூட்டம்

# திருப்பூர்–ஈரோடு–கரூர் மாவட்டங்களில் எழுச்சி





29.8.2012 புதன் மாலை 6 மணிக்கு திருப்பூர் மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம், துரை சாமி இல்லத்தில் நடைபெற்றது. முகில்ராசு வரவேற்புரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன், மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் துரைசாமி, மண்டல அமைப்புச் செயலாளர் பல்லடம் விசயன் ஆகியோர் உரையாற்றினர். பெரியார் முழக்கம் ஏட்டிற்கான 180 சந்தாக்களை பொதுச் செயலாளரிடம் வழங்கினர். விரைவில் ஒரு ஆயிரம் சந்தாக்கள் வசூலித்து தருவதாக அறிவித்துள்ளனர். இறுதியாக கீழ்க்கண்ட தோழர்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

திருப்பூர் மாவட்டத் தலைவர் : சு. துரைசாமி, செயலாளர் - சு. அகிலன், பொருளாளர் - இரவிச் சந்திரன், அமைப்பாளர் - கிளாக்குளம் கு. செந்தில், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் - செந்தில் குமார், தமிழ்நாடு அறிவியல் மன்றம் அமைப்பாளர் - மடத்துக்குளம் மோகன்.

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக மாவட்ட பொறுப்பாளர்கள் : தலைவர் - பாரதிவாசன், செயலாளர் - அனுப்பட்டி மா. பிரகாசு, அமைப்பாளர் - ஜீவா நகர் பரமேசுவரி.

திருப்பூர் மாநகரம்: தலைவர் - சண்முகம், செயலாளர் - ஜீவா நகர் ர. குமார், அமைப்பாளர் - அ. நீதிராசன்.

திருப்பூர் ஒன்றியம்: தலைவர் - முருங்கம் பாளையம் இரா. மூர்த்தி, செயலாளர் - இரா. தண்டபாணி, அமைப்பாளர் - முத்து.

சேவூர் கிளை : தலைவர் - ஆனந்த குமார், செயலாளர் - இரமேசு, அமைப்பாளர் - தனசேகர்.

பல்லடம் ஒன்றியம் : தலைவர் - ந. ஆறுமுகம், செயலாளர் - ர.மணிகண்டன், அமைப்பாளர் - ந.முத்துக்குமார்.

பல்லடம் ஒன்றியம் : தலைவர் - சுந்தரராசன், செயலாளர் - சு. வடிவேல், அமைப்பாளர் - தேவராஜ்.

பொங்கலூர் ஒன்றிய அமைப்பாளர் - கார்த்திக்.

அவினாசி ஒன்றிய அமைப்பாளர் - கனகராசு.

உடுமலை ஒன்றிய அமைப்பாளர் - ப. குண சேகரன்.

உடுமலை நகர அமைப்பாளர் - க.மா. மலரினியன்.

30.8.2012 வியாழக் கிழமை மாலை 6 மணிக்கு ஈரோடு மற்றும் கரூர் மாவட்டக் கழகங்களின் கலந்துரையாடல் கூட்டம், ஈரோடு ரீஜென்சி அரங்கில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன், மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் ப. சிவகாமி, மண்டல அமைப்புச் செயலாளர் கோபி இராம. இளங்கோவன் ஆகியோர் உரையாற்றினர். ஈரோடு மாவட்டம் வடக்கு தெற்கு என இரண்டாக பிரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. கழகத் தோழர்கள் கழக வளர்ச்சி நிதியினை வழங்கினர். பலர் வழங்க இருக்கும் தொகையினை அறிவித்தனர். கீழ்க்கண்ட தோழர்கள் பொறுப்பாளர்களாக அறிவிக்கப் பட்டனர்.

கரூர் மாவட்டத் தலைவர் : பாபு (எ) முகமது அலி, செயலாளர் - இரா. காமராசு, பொருளாளர் - தி.க. சண்முகம், அமைப்பாளர் - ரெ. மோகந்தாசு. துணைத் தலைவர் - சத்தியசீலன்,

பெரியார் தொழிலாளர் கழக அமைப்பாளர் - கட்டளை லெனின்.

தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் - ம. முத்து.

தமிழ்நாடு மாணவர் கழக துணை அமைப் பாளர்கள் - வினோத், யோக சேகர்.

தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் - ஆ. மலைக்கொழுந்தன்.

கிருஷ்ணராயபுரம் ஒன்றியம்: தலைவர் - சிறிகாந்த், செயலாளர் - இரஞ்சித்.

கரூர் ஒன்றிய அமைப்பாளர் - சு. இராசா.

தோகைமலை ஒன்றிய அமைப்பாளர் - மு. திருப்பதி.

க. பரமத்தி ஒன்றிய அமைப்பாளர் - சி. சுப்பிரமணி

கடவூர் ஒன்றிய அமைப்பாளர் - க. விஜயமோகன்

தாந்தோனி ஒன்றிய அமைப்பாளர் - சதீசுகுமார்

கிருஷ்ணராயபுரம் நகர அமைப்பாளர் - இரா. மாணிக்கம்.

ஈரோடு வடக்கு மாவட்டம் : தலைவர் கா. நாத்திக சோதி, துணைத் தலைவர் கா.சு. வேலுச்சாமி, செயலாளர் - ம. நிவாசு, இணைச் செயலாளர் - எலத்தூர் செல்வக்குமார், பொருளாளர் - வி.சு. விசு, அமைப்பாளர்கள் - க. அர்ச்சுணன், சதுமுகை பெ.பழனிச்சாமி.

(4 ஆம் பக்கம்)





**தலையங்கம்**

## மோடியை அம்பலமாக்கும் தீர்ப்பு

குஜராத்தில் மோடி ஆட்சியில் 2002 ஆம் ஆண்டு நடந்த இஸ்லாமியர் இனப் படுகொலையில் 'நரோடா பாட்டியா' என்ற அகமதாபாத் புறநகர் பகுதியில் 97 இஸ்லாமியர்கள் உயிருடன் நெருப்பில் போட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மையோர் பெண்களும் குழந்தைகளும் ஆவர். இதில் உண்மையான குற்றவாளிகளை மறைத்து கண்துடைப்புக்காக வழக்குகளைப் பதிவு செய்தது மோடி ஆட்சி. உச்சநீதிமன்றம் தலையிட்டு, முன்னாள் மத்திய புலனாய்வுத் துறை இயக்குநர் ஆர்.கே. ராகவன் தலைமையில் சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு 32 குற்றவாளிகளை அடையாளம் கண்டது. அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த அகமதாபாத் சிறப்பு விரைவு நீதிமன்ற நீதிபதி, ஆகஸ்ட் 31 ஆம் தேதி தீர்ப்பு வழங்கினார். ஜோட்ஸ்னா யாக்னிக் என்ற பெண் நீதிபதி வழங்கியுள்ள தீர்ப்பு, பல்வேறு வகையில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்தப் படுகொலையை முன்னின்று நடத்திய மோடி அமைச்சரவையில் இடம் பெற்றவரும், அவருக்கு மிக நெருக்கமானவர் என்று கூறப்படுகிறவருமான கொட் நானி என்ற பெண் அமைச்சருக்கு 28 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. மோடி முதலில் இவரை, குற்றவாளிப் பட்டியலிலேயே சேர்க்கவில்லை என்பதும், உச்சநீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழு தான், குற்றப் பட்டியலில் இணைத்தது என்பதும் குறிப்பிடத் தக்கது. 2002 ஆம் ஆண்டு இந்தப் படுகொலைகளை நடத்தியதற்காக 2007 ஆம் ஆண்டில் இவருக்கு அமைச்சர் பதவியை வழங்கியுள்ளார் மோடி.

இந்தத் தொகுதியில் 3 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட இவர், சட்டமன்ற உறுப்பினராக இருந்தக் காலத்திலேயே இந்த இனப் படுகொலையை முன்னின்று நடத்தியுள்ளார்.

'பஜ்ரங்தள்' என்ற ஆர்.எம்.எஸ். வன்முறைப் பிரிவு அமைப்பின் தலைவராக இருந்த பாபு பஜ்ரங்கி என்பவருக்கு இந்த வழக்கில் இறக்கும்வரை சிறையில் இருக்க வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். இவரும் படுகொலையை திட்டமிட்டு முன்னின்று நடத்தியவர். 22 குற்றவாளிகளுக்கு 24 ஆண்டு ஆயுள் சிறை விதிக்கப்பட்டுள்ளது. 29 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினராக பதவியில் இருக்கும் ஒருவர் மதக்கலவர வழக்கில் தண்டிக்கப்படுவது இதுவே முதல் முறை. இந்தத் தீர்ப்பில் மற்றொரு முக்கிய அம்சம். இந்த இனப் படுகொலை திட்டமிடப்பட்டு சதித் திட்டம் தீட்டி நிறைவேற்றப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளதாகும். பொதுவாக இது போன்ற வழக்குகளில் நீதிமன்றங்கள் குற்றங்களுக்குத் தண்டனை வழங்குமே தவிர, சதித் திட்டத்தை உறுதி செய்வதில்லை. இப்போது தண்டிக்கப்பட்டுள்ள 31 குற்றவாளிகளும் முன்கூட்டியே கூடி சதித் திட்டம் தீட்டி இந்தப் படுகொலையை நடத்தியுள்ளதை நீதிமன்றம் திட்டவட்டமாக ஏற்றுக் கொண்டு, "தொகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டிய சட்டமன்ற உறுப்பினரான கொட்நானி மக்களைக் காப்பாற்ற முயற்சிக்காமல் அவரே முன்னின்று இந்தப் படுகொலைக்கான சதித் திட்டங்களை தீட்டி, அவை நடக்கும்போது, அந்த இடத்திலிருந்து வன்முறைக் கும்பலை பஜ்ரங்தள் தலைவரோடு சேர்ந்து வழி நடத்தியுள்ளார்" என்று நீதிபதி தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து ஆத்திரத்தில் தன்னிச்சையாகவே கலவரம் நடந்தது என்று குஜராத் முதல்வர் மீண்டும் மீண்டும் கூறி வந்ததை இந்தத் தீர்ப்பு அழுத்தமாக மறுத்துள்ளது.

இஸ்லாமிய பெண்கள் கொடூரமான பாலுறவு வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு நெருப்பில் வீசப்பட்டுள்ளார்கள் என்பதையும் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இந்தக் குற்றத்தை இழைத்தவர்களை குறிப்பிட்டு, அடையாளம் காண முடியவில்லை என்று கூறியுள்ள நீதிமன்றம், பாலுறவு வன்முறைக்கு பலியாகி அதிசயமாக உயிர் தப்பிய ஒரு பெண்ணுக்கு, குஜராத் அரசு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்துள்ளது. பிறந்து 20 நாட்களே ஆன இஸ்லாமிய குழந்தையைக்கூட தீயில் போட்டுக் கொன்றுள்ளது, கொடூரத்தின் உச்ச கட்டம் என்று, இந்த நீதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

குற்றத்தின் தன்மை கொடூரமாக இருந்தும் மரண தண்டனை விதிக்கப்படாமைக்கு, நீதிபதி சுட்டிக்காட்டியுள்ள காரணம், மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தூக்குத் தண்டனை வழங்கியிருந்தால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைத்திருக்கும். சமூகத்தில் குற்றங்கள் குறைய தூக்குத் தண்டனை தேவை என்றாலும், அண்மைக் காலமாக உலக அளவில் தூக்குத் தண்டனைக்கு எதிராக உருவாகிவரும் உலகப் போக்குக்கு மாறாக தூக்குத் தண்டனை விதிக்க விரும்பவில்லை ("the court cannot overlook the global trend prevelent in the recent years") – என்று நீதிபதி சுட்டிக் காட்டியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். தூக்குத்தண்டனை குறித்த தனிப்பட்ட கருத்து நீதிபதிக்கு இருந்தாலும் கூட தூக்குத் தண்டனைக்கு எதிரான சர்வதேசப் போக்கை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நீதிபதி பதிவு செய்துள்ளார்.

மோடி நல்லாட்சி நடத்துகிறார் என்றும் அடுத்த பிரதமராக வரக்கூடிய தகுதி கொண்டவர் என்றும், பார்ப்பன இந்துத்துவ சக்திகள் திட்டமிட்டு பரப்பி வரும் மாய்மாலங்களுக்கு சரியான பதிலடியை இத்தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

# காஞ்சி மக்கள் மன்றத்தில் செங்கொடி நினைவு நாள்





மூன்று தமிழர்களின் தூக்குத் தண்டனையை இரத்து செய்யக்கோரி தீக்குளித்து உயிர் நீத்த தோழர் செங்கொடியின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 28.8.2012 செவ்வாய் கிழமை அன்று காஞ்சிபுரம் மக்கள் மன்றத்தில் நடைபெற்றது. அன்று காலை 8 மணிக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மக்கள் மன்ற கொடியினை ஏற்றி வைத்தார். காலை 10 மணிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ. வந்திருந்து நினைவுச் சுடரையேற்றி நினைவேந்தல் உரையாற்றினார். தொடர்ந்து பல்வேறு இயக்கங்களின் தலைவர்கள், பொறுப்பாளர்கள் அஞ்சலி செலுத்திச் சென்றனர்.

மாலை 6 மணிக்கு நினைவேந்தல் பொதுக் கூட்டம் பறை ஆட்ட நிகழ்ச்சியுடன் தொடங்கியது. காஞ்சி மக்கள் மன்றப் பொறுப்பாளர் மகேஷ் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து சிறுவர்களின் நடனம், கவிதை, இடையிடையே உரை என்று நடைபெற்றது. ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா உரையாற்றி முடிந்ததும் திடீரென மழை பெய்யத் தொடங்கியது. எனவே கூட்டம் தடைபட்டது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் தி.வேல்முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அனைவரின் சார்பாகவும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் நிறைவுரையாற்றினார்.

# பேரிகையில் தோழர் பழனிக்கு நினைவேந்தல் கூட்டம்




27.8.2012 திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு கிருட்டிணகிரி மாவட்டம் ஒசூரை அடுத்த பேரிகையில், படுகொலை செய்யப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்ட கழக அமைப்பாளர் பழனி நினைவேந்தல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக நடைபெற்ற இந்தப் பொதுக் கூட்டத்திற்கு, பேரிகை ஒன்றிய அமைப்பாளர் முருகேசு தலைமையேற்றார். கிருஷ்ணப்பா, பாஸ்கர் ஆகியோர் தளி எம்.எல்.ஏ. (சி.பி.ஐ.) இராமச்சந்திரனின் அடக்குமுறைகளை விளக்கும் விதமாக பாடல்களை (தெலுங்கில்) பாடினர். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கழகத் தலைவர் தமது உரையில் -

"இந்த நாட்டில் கம்யூனிசம் பரவாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வதற்கு ஒரு கட்சி இருக்கிறது. அதுதான் கம்யூனிஸ்ட் கட்சி என்று பெரியார் சொல்லியுள்ளார். பெரியார் சொன்னது வேடிக்கைக்காக அல்ல என்பதை நிரூபிக்கும்படி தற்போது சி.பி.ஐ. நடந்து கொள்கிறது என்று சி.பி.ஐ. கட்சியின் நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி பேசினார்.

சி.பி.ஐ. மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் (மக்கள் விடுதலை) விந்தைவேந்தன், பெங்களூர் கலைச் செல்வி, மாவட்ட தலைவர் குமார், கெலமங்களம் ஒன்றிய அமைப்பாளர் கிருஷ்ணன், தேன்கனிக்கோட்டை ஒன்றிய அமைப்பாளர் வெங்கிடகிரியப்பா ஆகியோர் உரையாற்றினர்.

# திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்தல்

# 13 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளை விடுதலை செய்க!

'சேவ் தமிழ்' அமைப்பின் சார்பில் சிறையில்நீண்ட காலம் வாடும் இஸ்லாமிய சிறைவாசிகளின் நியாயமான விடுதலைக்கான உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்தும், அவர்களை விடுதலை செய்யக் கோரியும், செப்டம்பர் முதல் தேதி சென்னை லயோலா கல்லூரி 'பிஎட்' அரங்கில் நடந்த கூட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார்.

"தமிழ்நாட்டில் பெரியாரின் திராவிடர் இயக்கம், திராவிடர் என்ற குடையின் கீழ் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளான பார்ப்பனரல்லாதார், இஸ்லாமியர்கள், தலித் மக்கள், கிறிஸ்தவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, ஒடுக்கும் சக்தியான பார்ப்பனர்களை தனிமைப்படுத்தி, இந்த மக்களின் விடுதலைக்கும், உரிமைக்குமான இயக்கத்தை முன்னெடுத்தார். அதன் விளைவாக ஏனைய வடமாநிலங்களில் மிக மோசமாக கட்டமைக்கப்பட்டதைப் போன்ற குறுகிய இஸ்லாமிய வெறுப்பு தமிழகத்தில், முளை விடும் வாய்ப்புகள் தடுக்கப்பட்டன. மதத்தால் வேறுபட்ட இஸ்லாமியர்களை திராவிடர்களாக, சகோதரர்களாக தமிழகம் அரவணைத்தது. ஒடுக்கப்பட்ட மக்களிடையே உருவாக்கப்பட வேண்டிய இந்த ஒற்றுமையைக் குலைக்க பார்ப்பனிய இந்துத்துவ சக்திகள் திட்டமிட்டு மேற்கொள்ளும் முயற்சிகள், சூழ்ச்சிகள் இப்போது, இஸ்லாமிய சகோதரர்களைத் தனிமைப்படுத்துவதில் வெற்றிப் பெற்று வருகிறது. ஆனால், 'திராவிடர்' அடையாளத்தில் தான் சரியான சமூக விடுதலை தங்கியுள்ளது என்ற உறுதியான கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கும் உண்மையான பெரியாரியல்வாதிகள், இஸ்லாமியர்களின் நியாயமான உரிமைக் குரலுக்கு என்றும் குரல் கொடுப்போம்" என்று குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

கோவையில் 1998 இல் நடந்த குண்டுவெடிப்பு வன்முறைகளை நாம் ஏற்கவில்லை. அது கண்டிக்கத்தக்கது. உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், குண்டுவெடிப்புக்கான காரணம் எங்கேயிருந்து தோன்றியது? 1997 இல் செல்வராசு என்ற போலீசார், தனிப்பட்ட பிரச்சினையில் ஒரு இஸ்லாமியரால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, காவல்துறையே அதை ஒட்டுமொத்த இஸ்லாமியருக்கு எதிரான குற்றமாக மாற்றியது. கோவையில் 19 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். முஸ்லீம்களுக்கு சொந்தமான வணிக நிறுவனங்கள் உடைமைகள் ரூ.1000 கோடி மதிப்பீட்டு அளவில் நாசமாகப்பட்டன. இந்தக் குற்றத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் உடனே பிணை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். ஒருவர்கூட இந்த வழக்கில் தண்டிக்கப்படவில்லை.

ஆனால், குண்டுவெடிப்பு வழக்கில் கண்மூடித் தனமாக இஸ்லாமிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். 166 முஸ்லீம் சிறைவாசிகள், விசாரணை என்ற பெயரில் சிறையில் அடைக்கப்பட்டனர். 10 ஆண்டுகள் அவர்களுக்கு பிணை மறுக்கப்பட்டது. 9 ஆண்டுகாலம் சிறை வாசத்துக்குப் பிறகு, 8 பேர் குற்றமற்றவர்கள் என்று நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்டனர். 43 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப் பட்டது. 15 பேருக்கு 13 வருட தண்டனை வழங்கப் பட்டது.

குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக நிறுவனர் குன்னங்குடி அனிபா, சுமார் 16 ஆண்டு சிறை வாசத்துக்குப் பிறகு இப்போது நிரபராதி என்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். குன்னங்குடி அனிபாவின் மகள் திருமண நிகழ்வின் போது திருமண வீட்டுக்குள் நுழைந்து, காவல்துறை அவரை கைது செய்தது. 16 ஆண்டு சிறை வாசத்துக்குப் பிறகு நீதிமன்றம் விடுதலை செய்வதற்கு 20 நாட்களுக்கு முன்பு, அனிபாவின் தந்தை மரண மடைந்தார். அந்த நிகழ்வில் பங்கேற்க அனுமதி கேட்டபோதும்கூட அதற்கு அனுமதிக்கப்படவில்லை.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அண்ணாவின் நூற்றாண்டையொட்டி 7 ஆண்டுகள் சிறையில் கழித்த ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்யும் மிகச் சிறப்பான மனித உரிமைக் கண்ணோட்டத்திலான, அண்ணாவுக்கு உண்மையான சிறப்பு செய்யக் கூடிய முடிவை எடுத்தது. அதன்படி 1405 கைதிகள் விடுதலை செய்யப் பட்டனர். ஆனால், இதில் ஒருவர்கூட இஸ்லாமியர் கைதி இல்லை.

கோவை குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்ட மசானி, 13 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு குற்றமற்றவர் என்று விடுதலை செய்யப்பட்டார். கடுமையான சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்டதால் கால் துண்டிக்கப்பட்ட அவர், சிறையில் முறையான சிகிச்சை வழங்கப்படாததால் மேலும் மோசமாக பாதிக்கப்பட்டார். அவரது எடை 40 கிலோ குறைந்தது. அவருக்கு உடனடியாக சிகிச்சை தர வேண்டிய நிலை வந்தபோது, சிறைக்குள்ளே சிகிச்சை தரப்படாவிட்டால் உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்ற நெருக்கடியில் சிகிச்சைக்கு அனுமதிக்கலாமா என்று சிறைத் துறை அதிகாரிகள், தமிழக அரசிடம் ஆலோசனை கேட்டனர். அப்போது தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் முதன்மைச் செயலாளராக இருந்த முனிர்கோதா எனும் அய்.ஏ.எஸ். அதிகாரி, முதல்வரைத் தொடர்பு கொள்ள முடியாத சூழலில் அவசரமாக மருத்துவத் துறை, காவல்துறை உயர் அதிகாரிகளோடு கலந்து பேசி, அனைவருமே சேர்ந்து, மருத்துவ வசதி யளிக்கலாம் என்று முடிவெடுத்தனர். அதன் காரணமாக அந்த அய்.ஏ.எஸ். அதிகாரியை பணி நீக்கம் செய்து, முதல்வர் ஜெயலலிதா தண்டித்த தோடு, அந்த அதிகாரியை 'தேச விரோதி' என்று குற்றம் சாட்டினார்.

இந்த கசப்பான வலிகளை எல்லாம் ஏற்றுக் கொண்டுள்ள இஸ்லாமியர்கள் தற்போது சிறையில் குண்டு வெடிப்பு வழக்குகளிலோ, மதக் கலவர வழக்குகளிலோ தொடர்பில்லாத இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டுள்ள 20 சிறைக் கைதிகளை விடுதலை செய்யக் கோருகின்றனர். இவர்கள் 13 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அண்ணா பிறந்த நாளில் கைதிகளை விடுதலை செய்வது எனும் தி.மு.க. ஆட்சியில் பின்பற்றிய நடைமுறையை தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் பின்பற்றி, இஸ்லாமிய கைதிகளுக்கு அநீதியாக அவர்களை வேற்றுமைப் படுத்தி இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை தமிழக அரசு ஏற்று செயல்பட வேண்டும். திராவிடர் விடுதலைக் கழகம் இந்த மனித உரிமைக்காக குரல் கொடுக்கும் இயக்கங்களோடு இணைந்து போராடும்.

## தமிழக முதல்வருக்கு இஸ்லாமிய அமைப்புகள் உருக்கமான கடிதம்

தமிழக சிறைகளில் தொடர்ந்து 13 ஆண்டுகளாக அடைக்கப்பட்டுள்ள பொது மன்னிப்புக்கு உரிய தகுதி பெற்ற சிறைவாசிகளை அண்ணா பிறந்த நாளில் விடுதலை செய்ய வேண்டும் என்று அனைத்து முஸ்லீம்கள் அமைப்பு முதல்வருக்கு (ஜமா அத்துல் உலக மாசபை) வேண்டுகோள் கடிதம் அனுப்பியுள்ளது. கடிதம் விவரம்:

தமிழகத்தில் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று சிறப்பான முறையில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் தங்களுக்கு வாழ்த்துக்களுடன், எங்கள் சமூகத்தின் சார்பாக ஒரு முக்கிய கோரிக்கையை உங்கள் முன் வைத்திட விரும்புகின்றோம்.

முந்தைய தி.மு.க. அரசு சிறைக் கைதிகள் பொது மன்னிப்பு விடுதலையின்போது முஸ்லிம் சிறைக் கைதிகள் விஷயத்தில் குறிப்பாக அரியானா மாநில அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் (CA No,30.2005) வழங்கிய உத்தரவு வழிகாட்டுதலை புறந்தள்ளி பாரபட்சமான முறையில் நடந்து கொண்டது. தமிழக அரசு பொது மன்னிப்பு விடுதலையில் தகுதியற்ற வழக்குகள் எவையெல்லாம் என்பதனை அரசாணை எண்.1762/87 இல் தெளிவாகக் குறிப்பிட்டுள்ள நிலையில் இவ்வரசாணையில் குறிக்கப்பட்டுள்ள எந்த குற்றப் பிரிவிலும் தண்டிக்கப்படாத பொது மன்னிப்பில் விடுதலைக்கு தகுதி பெற்ற முஸ்லிம் கைதிகள் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாளின்போது விதிகளுக்குப் புறம்பாக பாரபட்சமான முறையில் தி.மு.க. அரசால் விடுதலை மறுக்கப்பட்டனர்.

கடந்த காலங்களில் இஸ்லாமிய சமூகத்திலுள்ள சிலரின் தவறான வழிகாட்டுதலால் வழி பிறழ்ந்த இளைஞர்கள் பலர் அதற்கு ஈடாக நீண்ட நெடும் சிறைவாசத்தை தண்டனையாக அனுபவித்து விட்டனர். சிறைக் கைதிகளின் குடும்பங்கள் குறிப்பாக பெண்கள் பல்வேறு துன்ப துயரங்களுக்கு ஆளாகி உள்ளனர். 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்வுகளில் குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்ட 200க்கும் மேற்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர்கூட மத ரீதியான குற்றங்களில் ஈடுபட்டதாக வழக்கோ தண்டனையோ சுமத்தப்படவில்லை என்பதும் அவர்கள் அனைவரும் இயல்பான வாழ்க்கை வாழ்ந்து வருவதும் தண்டிக்கப்பட்ட முஸ்லிம் கைதிகளின் அமைதியான மனநிலையை காட்டுகிறது.

இதனை தங்களின் மேலான கவனத்தில் கொண்டு தற்போது உச்சநீதிமன்றத்தால் தண்டனை உறுதி செய்யப்பட்டு அரசு வழங்கிடும் விடுதலை ஒன்றே தீர்வு என்ற நிலையில் உள்ள 20 முஸ்லிம் ஆயுள் தண்டனை கைதிகளுக்கும் மற்றும் விடுதலைக்கு தகுதியுள்ள அனைத்து முஸ்லிம் ஆயுள் தண்டனை கைதிகளுக்கும் கருணை அடிப்படையில் விடுதலை அளித்திட வேண்டுகின்றோம். விடுதலை செய்யப்படக் கூடிய கைதிகளால் இனி வரும் காலங்களில் எவ்வகையிலும் பொது அமைதிக்கு குந்தகம் விளையாது என்பதை நாங்கள் பொறுப்பேற்று உறுதியளிக்கின்றோம்.

தற்போது சீர்மிகு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. அரசு முந்தைய தி.மு.க. அரசின் பல்வேறு தவறுகளை சீர் செய்து வரும்போது முஸ்லிம் சிறைக் கைதிகளின் விஷயத்தில் தி.மு.க. அரசு மேற்கொண்ட அநீதிக்குப் பகரமாக விடுதலை மறுக்கப்பட்ட மற்றும் அரசாணை எண்.1762/87-ன் கீழ் தகுதியுள்ள அனைத்து முஸ்லீம் ஆயுள் தண்டனை கைதிகளுக்கும் விடுதலை வழங்கி உத்தரவிட ஜமா அத்துல் உலமா சபையின் தலைமையில் அனைத்து முஸ்லிம் சமுதாய அமைப்பின் சார்பாக பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம் என்று அந்த வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### ஏற்காடு தனியார் பள்ளியில் சிங்கள மாணவர்களுக்கு பயிற்சித் தருவதை எதிர்த்து கழகம் ஆர்ப்பாட்டம்

*29.8.2012 அன்று ஏற்காடு மான்போர்ட் தனியார் பள்ளியில் சிங்கள மாணவர்கள் 22பேருக்கு மட்டைப் பந்து பயிற்சிக் கொடுக்கப்பட்ட செய்தியறிந்து, திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் அ. பெருமாள் தலைமையில், ஏற்காடு தோழர்கள் 15 பேரும், சேலம் நகரத் தோழர்கள் இரா. டேவிட் மற்றும் 10-க்கும் மேற்பட்டோர் இணைந்து பள்ளியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதையறிந்து சேலம் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏற்காடு விடுதலை சிறுத்தைக் கட்சித் தோழர்களும் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.*

*பள்ளி தாளாளர் வாக்கிஷ் என்பவரிடம் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சிங்கள மாணவர்களை உடனே வெளியேற்றக் கோரியும் முழக்கங்கள் எழுப்பினர்.*

*காவல் துறையின் சமாதானத்தை ஏற்க மறுத்து பள்ளி தாளாளர் நேரில் வந்து மன்னிப்புக் கேட்டு வருத்தம் தெரிவித்தார். இனிமேல் இதுபோன்ற தவறு நடக்காது என தோழர்களிடம் உறுதியளித்தப் பின்பு தோழர்கள் கலைந்து சென்றனர்.*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கீழ்த்தரமான மக்கள் தன்மை

*எந்த அடிப்படை உண்மைகளும் இல்லாமல் தனி நபர்களை குறி வைத்து பரப்பப்படும் அவதூறுகள் பற்றி தந்தை பெரியார் எழுதிய அறிக்கை இது:*

"சுமார் 70 வருடங்களுக்கு முன் திரு. பா.வெ. மாணிக்க நாயக்கர் அவர்கள் ஈரோடு - கரூர் டிவிஷனில் அசிஸ்டென்ட் இன்ஜினியராக நியமிக்கப்பட்டபோது, ஒரு ஓவர்ஸீயரிடம் வேலை கற்க அமர்த்தப்பட்டார். பிறகு அவர் அஸிஸ்டென்ட் இன்ஜினியர் வேலை ஏற்றுக் கொண்டார். அப்போது அந்த ஓவர்ஸீயர் மாணிக்க நாயக்கரின் கீழ் வேலை பார்க்க வேண்டியவரானார். இவரின் நடத்தையை மாணிக்க நாயக்கர் வேலை பழகும்போது தெரிந்து இருந்ததினால், சந்தேகப்பட்ட ஒரு காரியத்தில் கண்டித்தார். இது அந்த ஓவர்ஸீயருக்குப் பிடிக்கவில்லை. 'நம்மிடம் வேலை பழகின பையன் நம்மைக் கண்டிக்கிறானே!' என்று கருதி மாணிக்க நாயக்கருக்குப் புத்தி சொல்லுகிற மாதிரி,

'நீங்கள் சிறு வயது; உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னார். உடனே மாணிக்க நாயக்கர். 'என் பெயர் ஏன் கெடும்?' என்று கேட்டார்.

'உங்களைப் பற்றி மக்கள் கண்டபடி பேசுகிறார்கள். இதற்கு இடம் வைத்துக் கொள்ளாதீர்கள்' என்று ஓவர்ஸீயர் சொன்னார்.

'என்ன பேசுகிறார்கள்? சொல்லுங்கள்' என்று மாணிக்க நாயக்கர் கேட்டார்.

'நீங்கள் பணம் வாங்க ஆரம்பித்து விட்டீர்கள் என்று பேசுகிறார்கள்' என்றார் ஓவர்ஸீயர்.

'அந்தப்படி யார் சொன்னார்? சொல்லுங்கள்' என்று சற்றுக் கோபமாகக் கேட்டார் மாணிக்க நாயக்கர். அதற்கு ஓவர்ஸீயர், 'ஜனங்கள் அப்படிப் பேசிக் கொள்ளுகிறார்கள்' என்று சொன்னார்.

உடனே மாணிக்க நாயக்கர் 'வாழாமல் உன் வீட்டிற்கு வந்திருக்கும் உன் மகளுக்கும் லஸ்கர் நாராயண சாமிக்கும் சம்பந்தம் உண்டு என்று ஊரெல்லாம் பேசிக் கொள்கிறார்களே? அப்படி நீ வைத்துக் கொள்ளலாமா?' என்று கேட்டார். உடனே அந்த ஓவர்ஸீயர் கோபப்பட்டு, 'எந்த அயோக்கியப் பயல் அப்படிச் சொன்னான்? சொல்லு; முட்டாள்தனமாகப் பேசாதே' என்றார்.

உடனே மாணிக்க நாயக்கர் தன் காலில் இருந்ததைக் கழற்றி அந்த ஓவர்ஸீயர் தலையில் இரண்டு, மூன்று போட்டார்; பக்கத்திலிருந்தவர்கள் தடுத்து ஓவர்ஸீயரைப் பார்த்து, 'நீங்களும் ஊரில் பேசிக் கொள்கிறார்கள் என்று சொன்னீர்கள்; அவரும் ஊரில் பேசிக் கொள்கிறார்கள் என்று சொன்னார். இதில் தப்பென்ன? உங்களைச் சொன்னதால் உங்களுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. நீங்கள் அவரைச் சொன்னது அவர் வேலைக்கே ஆபத்தாய் முடியுமே' என்று சொல்லி ஓவர்ஸீயரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி செய்தார்கள். இது, கரூர் அக்கால டி.பி.யில் நடந்த நிகழ்ச்சி.

இதை ஏன் எழுதுகிறேன் என்றால், அரசியலில் எதிர்க்கட்சி மீது, எதிரிகள் மீது குறை கூறுவதற்காகச் சிலர் எதையும் சொல்லிவிட்டு, அழுத்திக் கேட்டால், 'மக்கள் அப்படிப் பேசிக் கொள்கிறார்கள்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குப் புத்தி வருவதற்காக உண்மையாய் நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிட்டேன்.

'ஊரில் பேசிக் கொள்ளுகிறார்கள்' என்பது மிகக் கீழ்த்தரமான மக்கள் தன்மையாகும்.'

**பெரியார் 'விடுதலை' 26.3.1969**

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட இளைஞரணி : தலைவர் - நா. அருளானந்தம், செயலாளர் - புதுரோடு இராசேந்திரன். அமைப்பாளர் - இறையிலன் மூர்த்தி.

தமிழ்நாடு அறிவியல் மன்றம் : தலைவர் - கீழவானி சுந்தரம், செயலாளர் - அந்தியூர் வீரன், அமைப்பாளர் - காசிப்பாளையம் பழனிச்சாமி.

தமிழ்நாடு மாணவர் கழகம்: தலைவர் - சத்தி சுதாகர், செயலாளர் - புதுரோடு ஜீவானந்தம்.

பவானி ஒன்றிய அமைப்பாளர் : சி.ந. வேணுகோபால்.

அம்மாபேட்டை ஒன்றிய அமைப்பாளர் : கு. வேல்முருகன்.

கோபி ஒன்றிய அமைப்பாளர் : விஜயசங்கர்.

கோபி நகர அமைப்பாளர் : இரகுநாதன்.

சததி நகர அமைப்பாளர் : அசோக்.

டி.என்.பாளையம் ஒன்றிய அமைப்பாளர் : சுப்ரமணியன்.

நம்பியூர் ஒன்றிய அமைப்பாளர் : இரமேசு

பவானிசாகர் ஒன்றிய அமைப்பாளர் : கலைச்செல்வன்.

பெருந்துரை ஒன்றிய அமைப்பாளர் : பா. துரையன்.

ஈரோடு தெற்கு மாவட்டம் : தலைவர் கி. செல்லப்பன், செயலாளர் - செ. சசிக்குமார், பொருளாளர் - சுகுணா, அமைப்பாளர்கள் - சென்னிமலை செல்வராசு, கு. சண்முகப் பிரியன்.

தமிழ்நாடு அறிவியல் மன்றம் : தலைவர் - சண்முகசுந்தரம், செயலாளர் - பெ.சே. மோகன்ராஜ்.

மாவட்ட இளைஞரணி : தலைவர் - சுப்பிரமணி, செயலாளர் - மூர்த்தி, அமைப்பாளர் - முத்தூர் மதிவாணன்.

ஈரோடு நகரம்: தலைவர் - ஆ. திருமுருகன், செயலாளர் - சு. சிவா, அமைப்பாளர் - கு. சண்முகப்பிரியன்.

சித்தோடு கிளைக் கழகம் : தலைவர் - சி. சத்தியராசு, செயலாளர் - ராஜேஷ், அமைப்பாளர்கள் - குமார், இளங்கோ.

பெருமாள் மலை கிளைக் கழகம் : தலைவர் - தங்கமணி, செயலாளர் - ராசண்ணா.

சென்னிமலை ஒன்றியம் : தலைவர் - ரமேசு, செயலாளர் - அழகன்.

வெள்ளோடு கிளைக் கழகம் : தலைவர் - கோபி, செயலாளர் - பழனிச்சாமி, மரவபாளையம் கிளைக் கழக அமைப்பாளர் - ரவி.

ஈரோடு மாவட்டம் சார்பாக கீழ்க்கண்ட தோழர்கள் கழக வளர்ச்சி நிதியை வழங்கினர்:

| | | |
|---|---|---|
| ப. இரத்தின சாமி | - | 1,00,000 |
| ப. சசிக்குமார் | - | 50,000 |
| ந. கலைச்செல்வன் (கூடக்கரை) | - | 50,000 |
| கா. நாத்திகஜோதி (முதல் தவணை) | - | 50,000 |
| வீ. நேதாஜி (முதல் தவணை) | - | 50,000 |
| இராம. இளங்கோவன் | - | 1,00,000 |
| கு. சண்முகப்பிரியன் | - | 5,000 |

கழக வளர்ச்சி நிதி வழங்குவதாக அறிவித்த ஈரோடு மாவட்ட தோழர்களின் விவரம்:

| | | |
|---|---|---|
| ப. சிவக்குமார் (ஆசிரியர்) | - | 50,000 |
| சண்முக சுந்தரம் (ஆசிரியர்) | - | 50,000 |
| செ. மோகன்ராஜ் | - | 1,00,000 |
| வி.சு. விசு | - | 1,00,000 |
| விஜயசங்கர் | - | 10,000 |

## சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பெரியார் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

தலைநகர் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் 134வது தந்தை பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் 17.9.2012 திங்கள் மாலை 6 மணிக்கு இராயப்பேட்டை வி.எம். தெரு, இலாயிட்ஸ் சாலை சந்திப்பில் நடைபெறுகிறது. ச. சரவணன் தலைமையிலும், ப.கணேசன், கோ. தமிழரசன் முன்னிலையிலும், கி. இளைய சிம்மன் வரவேற்புரையிலும் நிகழ்ச்சி நடைபெறும்.

திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், இயக்குனர் மணிவண்ணன், வி.சி.க. கருத்தியல் பரப்புரைச் செயலாளர் எஸ்.எஸ். பாலாஜி ஆகியோர் உரையாற்றுகின்றனர். கி. முருகன் நன்றியுரை யாற்றுகிறார்.

தேனிசை செல்லப்பா இசை நிகழ்ச்சியுடன் நிகழ்ச்சி தொடங்குகிறது. நிறைவில் மு. கலைவாணன் குழுவினர் வழங்கும் பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியமான 'சந்திர மோகன்' பொம்மலாட்ட நாடகம் நிகழ்கிறது.

காலை 7.30 தொடங்கி 9 மணி வரை தோழர்கள் பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவிப்பர்.

10 கிளைக் கழகங்களில் கழகத்தின் பெயர்ப் பலகைகள் திறக்கப்படுகின்றன.

**சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 6th September 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.